Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 421 பிலவ வருடம், மார்கழி மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை
(06.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 02, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## புலனாய்வுத் தகவல்களுக்கமையவே பதவியிலிருந்து தூக்கப்பட்டார் சுசில்

## திஸ்ஸ குட்டியாராச்சி பகீர் தகவல்



•யோ.தர்மராஜ்

புலனாய்வுத் தகவல்களுக்கு அமையவே இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

பதவி நீக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறித்து ஊடகங்களுக்கு நேற்று (05) கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 02 பக்கம்

## 5 நட்சத்திர ஹோட்டலில் விறகு மூலம் சமையல்

### எரிவாயு தட்டுப்பாட்டால் மாற்று ஏற்பாடு



நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டால் கொழும்பு 5 நட்சத்திர ஹோட்டலொன்று, சமையலுக்கு விறகுகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

காலிமுகத்திடல் அருகிலுள்ள இந்த ஹோட்டல் வளாகத்தினுள் தனியான இடம் ஒன்றினை சமையல்காரர்கள் சமையலுக்கு பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எரிவாயு தட்டுப்பாட்டால் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட பல ஹோட்டல்களும் விறகுகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. மேலும் எரிவாயு தட்டுப்பாட்டின் மத்தியில் பல சிறிய ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# மகாராணியாரின் கோல் மலையக அரசியின் கையில்...



03 பக்கம்

## மலேரியாவை பரப்பும் நுளம்பு கண்டுபிடிப்பு

### யாழ். நகரப்பகுதியில் சிக்கியது

• யாழ் நிருபர்

அனோபிலிஸ் டிபென்சி எனும் மலேரியா அல்லது நகர்ப்புற மலேரியாவை பரப்பக் கூடிய ஒருவகை நுளம்பு யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மிகவும் அபாயகரமானது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த நுளம்பு மூலம் எல்லா பகுதியிலும் மலேரியா பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது. மலேரியாவை பரப்பக்கூடிய நுளம்புகள் எங்களுடைய பிரதேசங்களில் தாராளமாக இருக்கின்றன.

எனவே வெளிநாட்டில் இருந்து ஒருவர் இந்த மலேரியா தொற்றுடன் இங்கே வந்தால் உள்ளூரிலே இந்த நோய் பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் எவ்வாறு இந்நோயினைக் கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பாக மலேரியா உள்ள நாடுகளுக்கு செல்வோர் இந்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என்றார்.

## ஈஸ்ரர் தின தாக்குதல் சந்தேகநபர் மரணம்

•பாறுக் ஷிஹான்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பள்ளி ஒழுங்கை வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான சாலி முஹமது நளீம் என்ற சந்தேக நபரே நேற்று முன்தினம் (04) மாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். 02 பக்கம்

# மகாராஜாவுடன் மோதி வென்றவன் நான்!



## எங்களாலும் காரசாரமாக பேசமுடியும்: யாருக்கும் வாலாக இருக்கமாட்டோம்

### முன்னாள் ஜனாதிபதி மைத்ரி கொந்தளிப்பு

02 பக்கம்

## ராஜித, ரொஷானுக்கு கொரோனா தொற்று

முன்னாள் சுகாதார அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்னவுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



மைத்ரி சம்பவத்தைப் பண்ணாமல் விடமாட்டார் போலக் கிடக்குது...

## 12 - 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி

நாட்டில் 12 - 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை (07) முதல் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாடசாலைகள் வழமை நிலைக்கு



பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் திங்கட்கிழமை (10) முதல் வழமைக்கு கொண்டு வருவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் டொக்டர் அசேல குணவர்தன, கல்வி அமைச்சுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

பாடசாலைகளுக்கு தற்போது பகுதி பகுதியாகவே மாணவர்கள் அழைக்கப்பட்டு வரு வதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், நீண்ட நாட்களுக்கு பின்னர் புதிய தீர்மானத்திற்கு அமைய, அனைத்து மாணவர்களையும் பாடசாலைகளுக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வாடிக்கையாளர் டொலர் வைப்புகள் கட்டாயமாக மாற்றமென்பது வதந்தி

### மத்திய வங்கி ஆளுநர் விளக்கம்



Ajith Nivard Cabraal
@an_cabraal

Rumors spread by some mischievous elements that Sri Lankan #banks have been ordered by @CBSL to forcibly convert balances in their customers' #Forex accounts are totally false.
#SriLanka #Fakenews

இலங்கையின் வங்கிகளில் உள்ள வாடிக்கையாளர்களின் அந்நிய செலாவணி கணக்குகளில் உள்ள நிலுவைகளை வலுக்கட்டாயமாக மாற்றுமாறு மத்திய வங்கியினால் உத்தரவிடப்பட்டுள்ளதாக பரப்பப்படும் வதந்திகள் முற்றிலும் தவறானவை என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள ஆளுநர், இதுபோன்ற தவறான வதந்திகளை சிலர் பரப்புவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## உஷ்



இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்தவுடன், பதவி விலக்கலுக்குப் பின்னர் தொலைபேசியில் பேசினாராம் பிரதமர் மஹிந்த.

"இந்த தீர்மானத்திற்கும் உங்களுக்கும் தொடர்பில்லை என்பதை நான் அறிவேன்" என்று அப்போது மஹிந்தவிடம் கூறினாராம் சுசில்.

"சந்திரிகா அம்மையார் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்புமனுவை வழங்க மறுத்தபோது எனக்காக பேசி போராடி அதனை பெற்றுத்தந்தவர் நீங்கள். அதனை எப்போதும் மறக்கமாட்டேன்" என்று இதன்போது பதிலளித்தாராம் மஹிந்த ராஜபக்ஷ.



கொரோனா தொற்றினால் பாதிக்கட்டிருந்த வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 563 ஆவது படைப்பிரிவின் முன்னாள் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பண்டுக்க பெரேரா அண்மையில் கடவத்த, அல்தெனியவில் காலமானார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் பாதுகாப்பு படைகளின் பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர். அங்கு ஒருவருக்கொருவர் சல்யூட் அடித்து இராணுவ மரியாதை தெரிவித்துக்கொண்டனர்.

## பிரபல சமூகசேவகர் மாணிக்கவாசகம் காலமானார்




இலங்கையின் பிரபல வர்த்தகரும் சமூக சேவகரும், வத்தளை அருண்பிரசாத் மாணிக்கவாசகம் தமிழ் பாடசாலை நிறுவுனருமான எம்.மாணிக்கவாசகம் காலமானார்.

தமிழ் மக்களது கல்வி மேம்பாட்டிற்காகவும் தமிழ் சமூகத்தினுடைய மேம்பாட்டிற்காகவும் அயராது உழைத்தவர் மாணிக்கவாசகம். 02 பக்கம்

## இலங்கை கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் 12 பேர் விடுதலை



02 பக்கம்

# வடிகான் அமைக்காமல் வீதி புனரமைப்பு; மட்டு. இருதயபுரம் மக்கள் ஆர்ப்பாட்டம்





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதய புரத்தில் நிரந்தரமாக வடிகான் அமைக்கக்கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இருதயபுரம் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு மக்கள் நேற்றுக் காலை (05) இருதயபுரம் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மைதானத்திற்கு அருகில் நீண்டகாலமாக வடிகான் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் இதுவரையில் வடிகான்கள் அமைக்கப்படாமல் வீதியொன்றை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

"வீதிவேண்டாம் எங்களுக்கு வடிகானே வேண்டும்", "அரச அதிகாரிகளே கள விஜயம் செய்வதில்லையா...?" போன்ற சுலோகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நீண்டகாலமாக இப்பகுதி வெள்ளத்தில் மூழ்குவதாகவும் இதன் காரணமாக 800க்கும் அதிகமான குடும்பங்கள் மழைக் காலங்களில் பாதிக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வெள்ளநீர் வழிந்தோடும் வகையில் வடிகான்களை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும் இதுவரையில் வடிகான் அமைக்கப்படாமல் வீதி அமைப்பதை அனுமதிக்கமுடியாது என பொதுமக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் பூபாலராஜா உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## தற்கொலைக்கு முயன்ற யாத்திரிகர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(செ.பெருமாள்)

சிவனொளிபாதமலையில் தனக்குத்தானே தீ வைத்து தற்கொலை முயற்சிசெய்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று (05) மாலை உயிரிழந்தார்.

சிவனொளிபாத மலைக்கு கடவுதை பகுதியில் இருந்து யாத்திரை வந்த 40 வயதுடைய மூன்று குழந்தைகளின் தந்தையான கோசல ஹேரத் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை (02) நல்லதண்ணி தனியார் பேருந்து தரிப்பிடத்தில் தனக்குத் தானே தீ வைத்து தற்கொலை முயற்சி செய்துகொண்டார்.

இந்நிலையில் பாரிய தீக்காயங்களுடன் அவர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் நேற்று (05) மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவர் குடும்பத் தகராறு காரணமாகவே தீ வைத்து தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிண்ணியாவில் அரச மருந்தகமும் கூட்டுறவு விற்பனை நிலையமும் திறப்பு





(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியின் குட்டிக்கராச்சி சந்தியில் கூட்டுறவு விற்பனை நிலையமும், ஒசுசல மருந்தகமும் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்துகொண்டு நேற்று(05) மாலை இதனை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த அரச ஒசுசல மருந்தகம் தற்போது திறக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு விற்பனை நிலையத்தில் மொத்த மாகவும் சில்லறையாகவும் அத்தியாவசிய பொருட்கள் உட்பட பல தேவைகளை மக்கள் இதன் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரள, எம்.எஸ்.தௌபீக் மற்றும் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கிண்ணியா நகர சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## பொது ஆவணம் தொடர்பில் இன்றையதினம் இறுதி முடிவு

### தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமைக்குழு நேற்று தீர்மானம்

13ஆம் திருத்தம் என அறியப்படும், இலங்கை அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள ஒரேயொரு அதிகார பரவலாக்கல் சட்டத்தை முழுமையாக அமுலாக்க உரிய அழுத்தங்களை, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரதான தரப்பு என்ற முறையில், இலங்கை அரசுக்கு கொடுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்து பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் சார்பாக எழுதப்படவுள்ள பொது ஆவணக்கடிதம் தொடர்பாக, நவம்பர் 2ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "திண்ணை கலந்துரையாடல்" முதல் கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு வரைபுகளின் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும், அவை தொடர்பில் முன்வைக்கப் பட்ட வாதபிரதிவாதங்கள் தொடர்பாகவும், நேற்று மாலை மெய்நிகர் கலந்துரையாடல் மூலம் ஆலோசித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைக்குழு, இன்று அரசியல் குழுவை கூட்டி இது தொடர்பில் இறுதி முடிவை எடுப்பது என தீர்மானித்துள்ளது.

நேற்றைய மெய்நிகர் கலந்துரையாடலில் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளிட்ட தலைமைக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## பெர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவன வியாபார இடைநிறுத்தம் நீடிப்பு

இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புலனாய்வுகளைத் தொடரும் விதத்தில் பெர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் (பிரிஎல்) அதன் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதிலிருந்தும் முதனிலை வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்துமான இடைநிறுத்தத்தினை மேலும் ஆறுமாத காலப்பகுதிக்கு நீடிக்க தீர்மானித்துள்ளது.

2022 ஜனவரி 05 ஆம் திகதி பி.ப. 4.30 மணியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின் பிரகாரம் செயற்பட்டு, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## இடைநிறுத்தப்பட்டது வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா!

தைப்பொங்கல் தினத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவை இடைநிறுத்த தீர்மானிக் கப்பட்டுள்ளது.

வருடா வருடம் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறை உதயசூரியன் திடலில் நடத்தப்பட்டு வரும் பட்டத்திருவிழாவை இம்முறையும் நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்து அறிவித்திருந்தனர்.

அதிகரித்து வரும் கொரோனா அச்சுறுத்தல் உள்ளிட்ட காரணங்களை முன்னிறுத்தி இம்முறை பட்டத்திருவிழாவை இடைநிறுத்துமாறு பல்வேறு தரப்பில் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் பட்டத்திருவிழா ஏற்பாட்டு குழுவினருக்கும் பிரதேச மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று மாலை இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் படத்திருவிழாவை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இம்முறை வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா இடைநிறுத்தப்படுவதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

## இலங்கையை அச்சுறுத்தும் டெங்கு; 5 நாட்களில் 1,221 நோயாளர்கள்

இலங்கையில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், 5 நாட்களில் ஆயிரத்து 221 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் கடந்த 5 நாட்களில் 1,221 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், முதல் முறையாக நாட்டில் டெங்கு நோயாளர்களின் மூன்றாவது வகையினருக்கு தற்போது அடையாளம் காணப்படுவதாக வைத்தியர் அனோஜா வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பணிப்பாளருக்கு இடமாற்றம்

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜனக் நந்தன, உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதனடிப்படையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்குவின் பிரத்தியேக உதவியாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

### ராஜித, ரொஷானுக்கு ...

தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், அவர் வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரி முதலாம் திகதி முதல் அவருடன் தொடர்பில் இருந்த அனைவரும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்துக்கு தனிப்பட்ட பயணம் ஒன்றிற்கு சென்றுள்ள நிலையில், அவருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

### ஈஸ்டர் தின தாக்குதல் ...

உயிரிழந்துள்ள சந்தேகநபர் மௌலவி சஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பில் இருந்ததாக கூறி 2019.05.22 திகதி அன்று கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தங்காலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இதன்போது குறித்த சந்தேக நபருக்கு நோய் நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்துள்ளார்.

இவ்வாறு சிகிச்சைப் பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக பொரளை பொலிஸார் கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். தற்போது உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகளில் இடம்பெற்ற பின்னர் 2019 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி இரவு சாய்ந்தமருது பகுதியில் பொலிவேரியன் கிராமத்தில் இடம்பெற்ற இரு பிரதான குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூடு என்பன நடந்தேறியது.

பின்னர் ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோரை தேடி முப்படையினரும் பொலிஸாரும் சந்தேகத்தின் அடிப்படையில் பலரை கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிரபல சமூக சேவகர்...

வத்தளை வாழ் தமிழ் மக்கள் பயன்பெறுவதற்கு இந்து தமிழ் தேசிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்காக அருண்பிரசாத் அறக்கட்டளையின் இலவச வத்தளை புகையிரத வீதி, ஹுனுப்பிட்டிய எனும் இடத்திலுள்ள சுமார் 95 பேர்ச்சஸ் காணி, கல்வி அமைச்சுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை (08/01/2022) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் (No.51, Lauries Road, Colombo-04) இடம்பெறவுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

### புலனாய்வுத்...

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சந்தைக்குச் சென்று பேசிய கருத்து மாத்திரமே அனைவருக்கும் தெரியும்.

இந்த கருத்தைக் கொண்டே அவர் பதவி நீக்கப்பட்டதாக பலரும் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால், இந்த நாட்டில் புலனாய்வுத் துறை ஒன்று இருக்கின்றது.

அத்துறை வழங்கும் புலனாய்வுத்தகவல்கள் அரசாங்கம் தொடர்பாக, தேசிய பாதுகாப்புத் தொடர்பாக, மாற்று அரசாங்கத்திற்கான சதித் திட்டங்கள் தொடர்பாக மற்றும் அரசியல் தொடர்பாகவும் வழங்கப்பட்ட தகவல்களின் பிரதிபலனாகவே சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்டுள்ளார். மாறாக, சந்தையொன்றுக்கு சென்று கூறிய கருத்தினால் அவர் பதவி நீக்கப்படவில்லை.

இதேவேளை, நிமல் லான்சா, அரசின் கொள்கைகளை விமர்சிக்கவில்லை. அவர் எரிவாயு தொடர்பாக விமர்சித்துள்ளார். நாங்கள் அது தொடர்பாக அதிக விமர்சனங்களை முன்வைத்துள்ளோம். ஒருவருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டால் அவர் அந்த பொறுப்பை முறையாக நிறைவேற்ற வேண்டும். அதனை நிறைவேற்ற முடியாவிட்டால், பதவியிலிருந்து விலகுவதே நல்லது. ஆனால், நிமல் லான்சாவின் விமர்சனம் நீதியான ஒன்றாகும்.

எங்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் கிடைத்த வேட்புமனுத்தாக்கல், அதன் ஊடாக கிடைத்த மக்களாணை, அதனூடாக கிடைத்த பின்வரிசை உறுப்பினர் பதவியே எங்களுக்கான உயர்ந்த பதவியாகும். இதனூடாக நாங்கள் அதிக அனுபவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்

### இலங்கை கடற்பரப்பில்...

(மன்னார் நகர் நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் (05) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை தலைமன்னார் கடற்படையினர் கடந்த மாதம் 19 ஆம் திகதி கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவிக்கையில்,

குறித்த 12 இந்திய மீனவர்களும் நேற்றைய தினம் (05) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் சிறுவர் ஒருவரும் அடங்குகின்றார்.

இதன் போது குறித்த மீனவர்களுக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு கடற்தொழில் திணைக்களத்தினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குறித்த மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை வழங்கப்பட்டதோடு, குறித்த சிறைத் தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த மீனவர்களில் சிறுவர் ஒருவர் உள்ளமையினால் நிபந்தனையின் அடிப்படையில் எச்சரிக்கப்பட்டு, குறித்த சிறுவன் தனது கல்வியைத் தொடர வேண்டும் என நீதவான் அறிவுறுத்தியதோடு, குறித்த மீனவர்கள் விடுவிக் கப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் இலங்கைக்கான இந்திய துதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மகாராஜாவுடன் மோதி...

(யோ.தர்மராஜ்)

நாட்டில் தற்போது மக்கள் முகம் கொடுத்துள்ள துன்பங்களை பார்க்கும்போது, மீண்டும் அரசியல்வாதிகளிடம் ஏமாந்து அடுத்த தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களிப்பார்கள் என எனக்கு நம்பிக்கையில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, எங்களாலும் காரசாரமாக பேச முடியும் என்பதை காட்டுவதற்கே மாத்தளையில் அவ்வாறு உரையாற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று (05) இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது மக்கள் முகம் கொடுத்துள்ள துன்பங்களை பார்க்கும்போது, மீண்டும் அரசியல்வாதிகளிடம் ஏமாந்து அடுத்த தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களிப்பார்கள் என எனக்கு நம்பிக்கையில்லை. எவ்வாறான தவறுகள் இருந்தாலும் தேர்தல் நேரத்தில் கொடுக்க வேண்டிய நிவாரணங்களை வழங்கி, உண்ணுவதற்கு உணவுகள், பணம் மற்றும் பொருட்களை வழங்கி வாக்குகளை கேட்கலாம். ஆனால், 2015 ஆம் ஆண்டு அனைத்து பொருட்களும் பகிர்ந்தளித்த போதிலும் தண்ணீர் கூட வழங்காமல் நான் தேர்தலில் வெற்றிபெற்றேன். எனவே, மக்களும் உரிய முடிவுகளை உரிய நேரத்தில் எடுப்பார்கள்.

2015 நவம்பர் 21 ஆம் திகதி ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து வேதனையுடன் நோமையாக வெளியேறினேன். எனது மனைவி மற்றும் பிள்ளைகளின் உயிரை பணயம் வைத்து மிக அவதானத்துடனேயே பொது வேட்பாளராக நான் வெளியேறினேன். ஆனால், தலைமை கல்லில் மோதிக்கொள்ள வேண்டாம். எப்போதும் உங்களால் வெற்றிபெற முடியாது என சிலர் தலையில் அடித்துக்கொண்டு கூறினர். மகாராஜாவுடன் இந்த பொலன்னறுவை மைத்திரிபால சிறிசேனவால் வெற்றிபெற முடியுமா எனவும் பலரும் கேட்டனர். ஆனால், வென்றேன்.

பின்னர் போதைப்பொருள் மாபியாவை இல்லாதொழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தேன். ஆனால், போதைப்பொருட்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்து, மரண தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் இருந்தவர்கள் உள்ளே இருந்துகொண்டு விமர்சனத்தில் ஈடுபட்டனர். அவர்களில் ஐவரையே தூக்கிலிட வேண்டும் எனக் கைச்சாத்திட்டேன்.

ஆனால், என்னுடைய ஆட்சியிலிருந்த பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் கைகோர்த்துக்கொண்டு, மரண தண்டனை வழங்க முடியாது என நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்தனர்.

மரண தண்டனை வழங்கவேண்டும் என கைச்சாத்திட்டதை அறிந்ததும் சிறையிலிருந்த அனைவருக்கும் வயிற்றோட்டம் போனதாக சிறைச்சாலை அதிகாரி என்னிடம் கூறினார். இவ்வாறே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இல்லையேல் எங்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. இந்த உலகத்தில் யாரும் செய்யாத ஆட்சியையே நான் முன்னெடுத்தேன். என்னுடைய ஆட்சியிலிருந்த பிரதமரே எனக்கு எதிராக செயற்பட்டார். என்னுடைய அமைச்சரவையிலும் பெரும் பலம் ஐக்கிய தேசியக் கட்சியிடமே இருந்தது. எனக்கு நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ இருக்கவில்லை.

எனக்கொரு பிரதமர், அமைச்சரவை இல்லாது, நான் ஜனாதிபதியாக நாட்டை ஆட்சி செய்தேன். ஆகவே, என்னை யாரும் விமர்சிக்க கூடாது. யாரும் செய்யாத ஆட்சியை செய்ததற்காக எனக்கு விருது வழங்கவேண்டும். எந்தவொரு தலைவரும் தன்னுடைய அதிகாரத்தை நீக்கிக் கொள்ளவில்லை. நான் மட்டுமே 19 ஆவது திருத்தத்தின் ஊடாக என்னுடைய அதிகாரத்தை நீக்கியுள்ளேன்.

மாத்தளையில் நான் ஆற்றிய உரையின் பின்னர், எனது நண்பர்கள் பலரும் இது பற்றிப் பேசி, இது தான் டொப் ஸ்டோரி என்று கூறினர். மேலும், அந்த உரை கொஞ்சம் காரசாரமாக இருந்தது என்றும் சிலர் கூறினர்.

ஆனால், எங்களாலும் காரசாரமாக பேச முடியும் என்பதை காட்டுவதற்கே நான் அவ்வாறு உரையாற்றினேன். எனினும், சிலர் எங்களுக்கு கடுமையாக பேச முடியாது என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். சிலருக்கு அதிக அதிகாரம் இருக்கிறது என்று கொஞ்சம் அதிகமாகவே மேல் நோக்கிச் செல்கின்றனர்.

அரசாங்கம் எடுக்கும் முடிவுகளில் தவறுகள் இருக்கின்றன. சர்வதேசங்களின் நடவடிக்கையிலும் தவறுகள் இருக்கின்றன. இவற்றை நிவர்த்திசெய்ய வேண்டும். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவவே சர்வதேசங்கள் உதவும். 19 ஆவது திருத்தத்தினாலேயே சர்வதேசங்கள் உதவின.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாருடைய பின்னாலும் செல்ல வேலைத்திட்டங்களையும் முன்வைக்கின்றோம். அதனுடன் இணை வோருடனே நாங்களும் இணைவோம். மாறாக, நாங்கள் யாரின் வாலாகவும் இருக்க மாட்டோம் - என்றார்.

# இன்றைய ராசி பலன்

**06.01.2022 வியாழக்கிழமை மார்கழி 22**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: சதயம்** காலை 7.11 - 07.01.2022 காலை 6.21 வரை | பிற்பகல் 1.12 வரை | காலை 11.10 வரை |
| **யோகம்: சித்தி** மாலை 3.25 வரை | **திதி: பூர்வ பட்ச சதுர்த்தி** பிற்பகல் 12.29வரை | **முற்கரணம்: பத்திரை** அ.கா 1.26 - பி.ப 12.29 |
| **வியதீபாதம்** மாலை 3.25 - 07.01.2022 | **பூர்வ பட்ச பஞ்சமி** பி.ப 12.29 - 07.01.2022 | **பிற்கரணம்: பவம்** பி.ப 12.29 - இரவு 11.43 |

| | | |
|---|---|---|
| **சுப நேரங்கள்** காலை 11.07 - பி.ப 12.16 பிற்பகல் 12.16 - 1.44 | **குளிகை காலம்** காலை 9.20 - 10.48 | **லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி** |
| | **எமகண்ட காலம்** காலை 6.24 - 7.52 | |
| **அசுப நேரங்கள்** **ராகு காலம்** பிற்பகல் 1.45 - 3.13 | **துர் முகூர்த்தம்** காலை 10.19 - 11.06 பிற்பகல் 3.01 - 3.48 | |

**மேஷம்:** தொழிலில் முன்னேற்றம் உண்டாகலாம். வணிக முன்னேற்றமும் மகிழ்ச்சி தரும். சில விருப்பங்கள் நிறைவேறலாம். இல்லத்தில் ஒற்றுமை நிலவும். பணம் சம்பந்தப்பட்ட வேலைகளும் சிறப்புறும்.

**ரிஷபம்:** புதிய பணிகளை தேடுவோருக்கு சாதகமான நாளாக அமையலாம். நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வணிக ஒப்பந்தங்கள் உருவாகலாம். வீட்டிலும் பிரச்சினைகள் நீங்கத் தொடங்கும.

**மிதுனம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் வெற்றி கிடைக்கப் பெறலாம். தொழில் பயணம் ஏற்படலாம். சமூக மதிப்பு மேம்படும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல நிலை தோன்றலாம். பணிகளில் அவசியமற்ற அவசரம் வேண்டாம்.

**கடகம்:** வீட்டில் சிறிய குழப்பமான சூழ்நிலை உண்டாகலாம். அரசாங்க பணிகளில் சிறிய பிரச்சினைகள் தோன்றலாம். வணிகத்தில் நிதி இழப்பு ஏற்படலாம். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்: பூசம் நட்சத்திரத்துக்கு அ.கா 1.31 - 07.01.2022 அதிகாலை 12.29 வரை**

**சிம்மம்:** நீண்ட காலமாக நிறைவடையாத செயல்களில் தடைகள் நீங்கலாம். காதலில் இனிமையான நாளாக அமையலாம். திருமணமாகாதவர்களுக்கு திருமண மங்கள அறிகுறி தோன்றலாம். சிறிய வியாபார வருவாய் அதிகரிக்கலாம்.

**கன்னி:** வேலைத்தளத்தில் முதலாளியின் நம்பிக்கையை பெறுவதற்கு, பணிகளில் சிறப்பு கவனம் தேவைப்படலாம். பணத்தின் அவசியத்தை உணரும் நிலை ஏற்படலாம். நண்பர்களிடம் உதவி பெறும் முயற்சி உண்டாகலாம். இறைதியானம் நன்மை.

**துலாம்:** பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட மறை ஆய்வு கற்கைகளில் ஆர்வம் உண்டாகலாம். பிள்ளைகளின் தொழில் பிரச்சினைகள் நீங்கலாம். இன்று உங்கள் செயல்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரலாம். காதலர்களுக்கு திருமண திட்டம் உருவாகலாம்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணையுடன் இன்றைய நாளில் நேரத்தை ஒதுக்குவது, நன்மைகள் கிடைக்கலாம். உங்கள் வேலைகளை பிறரிடம் தர வேண்டாம். கடந்த கால தவறுகளை எண்ணி சிறிய கவலை ஏற்படலாம். இயற்கை மாற்றத்தால் உடல்நலத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். இறைவணக்கம் நன்மை.

**தனுசு:** வருவாய் நிலை மேம்படும். சில சூழ்நிலையும் சாதகமானதாக அமையலாம். குடும்பம் மற்றும் நண்பர்களின் ஆதரவு கிடைக்கலாம். உடல்நலத்தில் அக்கறை ஏற்படலாம். குறுகிய கால பயணம் ஏற்படலாம்.

**மகரம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் சிலசிக்கல் தோன்றலாம். பங்குச்சந்தை நிதி ஒதுக்கீடு முடிவுகளில் கவனம் தேவைப்படலாம். புதிய வேலைகளில் நண்பர்களின் ஆலோசனை நன்மை தரும். பேசும் சொற்களில் கவனம் தேவைப்படலாம்.

**கும்பம்:** வணிகத்தில் வருவாய் அதிகரிக்கலாம். கடனாக கொடுத்த பணத்தின் வரவு உண்டாகலாம். பணிகளில் மேலதிகாரிகள் உங்கள் உழைப்பால் மகிழ்ச்சி அடையலாம். இன்று மன மகிழ்வான பொழுதுபோக்கு ஏற்படலாம்.

**மீனம்:** எந்த விடயத்திலும் வாழ்க்கைத்துணையுடன் கோபம் தவிர்ப்பது நல்லது. உங்களை பற்றி நீங்களே குறைத்து மதிப்பீடுசெய்ய வேண்டாம். சில செயல்கள் தடைப்படலாம். தொண்டையில் சிறிய வலி உண்டாகலாம்.

# மகாராணியாரின் கோல் மலையகத்தில்!





(எஸ். சதீஸ்)

பொதுநலவாய நாடுகளுக்கான மகாராணியாரின் செய்தி அடங்கிய கோல் பொகவந்தலாவை பகுதிக்கு நேற்று (05) கொண்டுவரப்பட்டது.

பொதுநலவாய நாடுகளுக்கான மகாராணியின் கோலை ஏந்திய குழுவினர் நேற்றுக் காலை பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தோட்ட தொழிற் சாலையை வந்தடைந்தனர்.

பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் தேயிலை தொழிற்சாலைக்கு கொண்டு வரப்பட்ட பொதுநலவாய நாடுகளுக் கான மகாராணியின் கோலை ஏந்திய குழுவினருக்கு அமோக வரவேற்பளிக் கப்பட்டது.

கெர்க்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயத்தின் மாணவர்களின்பேண்ட் வாத்தியத்தோடு கோலை ஏந்திய குழுவினர் வரவழைக்கப்பட்டதுடன் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் இல. 01 தமிழ் வித்தியாலயத்தின் மாணவர்களால் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

இந் நிகழ்வுக்கு இலங்கை பொது நலவாய விளையாட்டு சங்கத் தலைவர் சுரேஸ் சுப்ரமணியம், பொதுநலவாய விளையாட்டுசங்க செயலாளர் நாயகம் மெஸ்வல் டிசில்வா, இலங்கை குயின்ஸ் பெட்டன் ரிலே முகாமையாளர் சந்தன லியனகே, முகாமையாளர் மேஜர் ஜெனரல் தம்மித் பெர்னாண்டோ, கெர்க்கஸ்வோல்ட் முகாமையாளர் ஏ.பி.டி.ஈ.திசேரா, கெர்க்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.சுந்தரேசன், கெர்க்கஸ்வோல்ட் இல. 01 தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் என்.பிரகாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தேயிலைத் தொழிற்சாலையில் இருந்து பயணத்தை ஆரம்பித்த பொதுநலவாய மகாராணியின் செய்தி அடங்கிய கோலை ஏந்திய குழுவினர் கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர் களிடம் மகாராணியாரின் கோலை ஏந்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம்

## ஆளுமைமிக்க அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை



(வவுனியா செய்தியாளர்)


வவுனியா ஸ்ரீராமபுரம் திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தின் வாயில் முன்பாக நேற்றுக் காலை 09.45 மணியளவில் பொதுமக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பாடசாலைக்கு ஆளுமைமிக்க அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்து பாடசாலையின் வாயில் முன்பாக அப்பகுதி மக்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், "கல்வித் திணைக்களமே அரசியல் வாதிகளின் கருத்துகளுக்கு அடிபணியாதே, கல்வி திணைக்களமே ஆளுமைமிக்க அதிபரே எமக்கு வேண்டும், எமது பாடசாலையின் தரத்தினை குறைக்காதே, கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியினை தடுக்காதே" போன்ற பல்வேறு வசனங்களை தாங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் பொதுமக்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என 50க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் 50 நிமிடங்கள் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

# மஸ்கெலியாவில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம்



(செ.தி. பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியான நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்ட தமிழ் வித்தியாலய ஆசிரியர் இல்லத்தில் நேற்று மதியம் 12.30 மணியளவில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது. இதனால் எவருக்கும் பாதிப்பு இல்லை எனவும் எரிவாயு அடுப்பு பகுதி அளவில் சேதமாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ரிக்ரொக் கொலை விவகாரத்தில் ஆறு சிறுவர்கள் கைது

## நாளை வரை விளக்கமறியல் உத்தரவு

ரிக்ரொக் வீடியோவில் ஆர்வம் காட்டிவந்த 17 வயது இளைஞனை கத்தியால் தாக்கி கொலை செய்ததாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய 06 சிறுவர்கள் கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்களை நாளை (07) வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சனி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் ஆறு பேரையும் சிறைச்சாலை பாதுகாப்புடன் மாகொல சிறுவர் காப்பகத்தில் தடுத்து வைக்குமாறு இதன்போது நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள், 12 தொடக்கம் 16 வயதுக்கிடைப்பட்டவர்கள் என கிராண்ட்பாஸ் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.



**சுயாதீன தொலைக்காட்சி மற்றும் வசந்தம் ஊடக வலையமைப்பின் புதிய தலைவராக நிரோஷன் பிரேமரத்தின ஐ.ரி.என். தலைமையகத்தில் நேற்று முன்தினம் (04) கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். மாத்தறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான நிரோஷன் கடந்த 13 வருடங்களாக சிங்கள செய்தி வாசிப்பாளராகவும் செய்திப் பிரிவில் கடமையாற்றினார். (அஷ்ரப் ஏ சமத்)**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 06ஆம் திகதி, வியாழக்கிழமை

# மக்கள் முன்னுள்ள கனதியான பொறுப்பு

கொரோனா வைரஸில் தொடங்கி எல்பா, பீட்டா, காமா, டெல்டா, ஒமிக்ரொன், டெல்மைக்ரான் என வைரஸ் உருமாற்றம் அடைந்து வருகிறது. உலக அளவில் ஒமிக்ரொன் வைரஸ் வேகமாகப் பரவி அச்சுறுத்திவரும் நிலையில் அடுத்த வைரஸ் இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் ஃப்ளோரினா எனும் இரட்டை உருமாற்ற வைரஸை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இன்ஃப்ளுயன்ஸா வைரஸும், கொரோனா வைரஸும் சேர்ந்து ஒருங்கிணைந்து இருப்பதால், ஃப்ளோரோனா வைரஸ் எனும் பெயர் வைத்துள்ளனர்.

உலக நாடுகள் அனைத்தும் டெல்டா வைரஸ், ஒமிக்ரொன் வைரஸுக்கு எதிராகக் கடுமையாகப் போராடி வரும் நிலையில், இஸ்ரேலில் ஃப்ளோரோனோ வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மேலும் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒமிக்ரொன் வைரஸ், 2 மாதங்களுக்குள் உலகில் ஏராளமான நாடுகளுக்குப் பரவிவிட்டது. ஏற்கெனவே மக்களை பாதித்துவந்த டெல்ட்டா வைரஸை ஓரங்கட்டி, தற்போது ஒமிக்ரொன் வைரஸால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

"ஃப்ளோரோனா வைரஸ் மனிதர்களின் நோய் எதிர்ப்பு சக்தியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தலாம். ஏனென்றால் இரு வைரஸ்கள் மனிதர்களை ஒரே நேரத்தில் தாக்கும்போது நோய் எதிர்ப்பு சக்தி திறன் கடுமையாக பாதிக்கும்" என கெய்ரோ பல்கலைக்கழக மருத்துவமனையின் மருத்துவர் நாலா அப்தெல் வஹாப் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பிரான்ஸில், புதிய உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதுடன் இது, 46 உருமாற்றங்களை கொண்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இதன் மூலம், இதுவரை 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மத்திய ஆபிரிக்க நாடான கெமரோனில் இருந்து வந்த பயணிக்கு முதன்முறையாக இந்த உருமாறிய கொரோனா கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் என 12 பேருக்கு இந்த வகை கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அத்தோடு கண்டறியப்பட்ட புது வைரஸானது ஒமிக்ரொனை விட அதிக பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது. அதேவேளை இது, 46 உருமாற்றங்களை கொண்டுள்ளதாக கூறும் ஆராய்ச்சியாளர்கள், ஐ.எச்.யு. பி.1.640.2 என இந்த கொரோனா வைரஸுக்கு பெயரிட்டுள்ளனர். எனினும், பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த புதிய வகை கொரோனா பிற நாடுகளில் இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனால், மிகவும் பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்பதை இவை வலியுறுத்துகின்றன.

கொரோனா நோய்த்தொற்றின் புதிய உருமாற்றமான ஒமிக்ரொன் பரவலிலிருந்து மக்களைக் காக்கும் வண்ணம் அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் மேலும் தீவிரமாகி ஊரடங்குக்குச் செல்லாமல் இருக்க வேண்டும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. குறிப்பாக, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் காற்று நமது சுவாசத்துக்கு மட்டும் உதவவில்லை. பல்வேறு உயிரினங்கள் பல்கிப்பெருகவும் உதவுகிறது.

வாழ்வாதாரத்துக்கும் நகர்வுக்கும் எப்போதுமே நெருங்கியத் தொடர்பு உண்டு. கொரோனா வைரஸ் காலம் அதை நமக்கு நன்கு உணர்த்தியது. நாள்தோறும் சிறிய தொகை ஊதியம் பெற்று குடும்பத் தேவையை சமாளிப்போர், நிரந்தர மாத வருவாய் உறுதி செய்யப்பட்டுள்ள நடுத்தர வர்க்கம், கோடிக்கணக்கில் பொருள் ஈட்டுவோர் என அனைவருமே ஏதாவது ஒருவகையில் நகர்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வாறு நகரும்போது ஒருவரின் சுவாசக் காற்றிலுள்ள நுண்ணுயிரிகள் காற்றின் மூலம் அடுத்தவர் சுவாசத்தில் நுழைவதால் வைரஸ் பரவுகிறது. இதனைத் தடுக்கவேண்டியது அரசின் கடமையாகிறது. எனவே, நோய்த்தொற்றுப் பரவலைக் குறைக்கும் நோக்குடனேயே கட்டுப்பாடுகள், பொதுமுடக்கம் போன்றவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கொரோனா வைரஸின் ஆயுட்காலம் மிகவும் குறுகியது என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. உயிரினங்களின் வாழ்நாள் எவ்வளவுக்கெவ்வளவு குறுகியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவை குறுகிய காலத்தில் மாற்றுருவை அடையும். தொடக்க மாற்றுருவைவிட அதன் அடுத்த மாற்றுரு வீரியம் மிக்கதாக இருக்கும். கொசுவை ஒழிக்க ஒருகாலத்தில் முயன்ற நாம் தற்போது விரட்ட முற்படுவதே இதற்கு சிறந்த உதாரணம்.

கொரோனா அல்ல ஒமிக்ரொன் வைரஸைக்கூட எதிர்க்கும் சக்தியும் மனிதர்களின் உடலில் வளரும் வாய்ப்பு உண்டு. தடுப்பூசி எடுத்துக்கொண்டால் நிச்சயம் நல்ல பலனைத் தரும். இதனால்தான் உலகம் முழுவதும் கடந்த இரண்டு ஆண்டுகளாக தடுப்பூசி விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

டெல்ட்டா மாற்றுருவின் மூலம் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் மருத்துவமனை அனுமதி தேவையின்றி தப்பிக்கத் தடுப்பூசி உதவியது என்றால் அது மிகையல்ல. ஆனால், நோய்த்தொற்றின் இரண்டாவது அலையின்போது செயற்கை சுவாசத்துக்காக அல்லல்பட்டு அது கிடைக்காமல் உயிரைவிட்டோரும் பலர். இந்நிலை மீண்டும் வந்துவிடக்கூடாது.

தற்போது உலகம் முழுவதும் பரவிவரும் ஒமிக்ரொன் கடந்த ஆண்டு நவம்பரில் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டது. இந்த மாற்றுரு கண்டறியப்பட்ட ஓரிரு நாட்களிலேயே கவலை தரும் தொற்றாக உலக சுகாதார அமைப்பால் அறிவிக்கப்பட்டுவிட்டது. சுமார் 108 நாடுகளில் 1.50 இலட்சத்துக்கும் அதிகமானோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் விரைவாகப் பரவும் தன்மையுடைய மாற்றுருவாக இது அறியப்படுகிறது.

பொதுவாக இப்படி புதுவகையான மாற்றுரு கண்டறியப்படும்போது உலக சுகாதார அமைப்பு, உலகளாவிய தரவுகளைச் சேகரிக்கிறது. இதன் மூலம் புதிய மாற்றுருவின் பரவும் தன்மை, எப்படித் தொற்றைக் கண்டறிவது, அறிகுறி என்ன, அதனால் ஏற்படும் பாதிப்பின் கடுமை, ஏற்கெனவே உள்ள தடுப்பூசி இந்த தொற்றினைத் தடுக்குமா, எந்த வகையான மருந்துகளுக்கு இது கட்டுப்படும் போன்றவற்றை தொகுத்துப் பகிர்கிறது.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளைக் கிருமிநாசினி கொண்டு அவ்வப்போது சுத்தப்படுத்திக்கொள்ளுதல் போன்றவற்றை அரசு, சுகாதாரத்துறை வலியுறுத்துகின்றன. இரண்டாண்டுகளாகத் தொடரும் இக்கொடுமை எப்போதுதான் தீரும் என்ற கவலையில் அனைவரும் உள்ளோம். குறுகிய காலத்துக்குள் தடுப்பூசியை கண்டறிந்த அறிவியல், நிச்சயம் இதற்கொரு தீர்வளிக்கும். ஆனால், ஆங்காங்கே இந்த நோயை முறியடிக்கும் நடவடிக்கைகள் தொடரும் வரை இந்நோயின் மாற்றுருக்கள் உருவாவதை தடுக்க இயலாது. இந்த இடத்தில்தான் தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வையும் உலக நாடுகளிலுள்ள அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் சுமார் 99வீத மக்கள்தொகை தடுப்பூசி செலுத்திக்கொண்ட நாடு ஐக்கிய அரபு அமீரகம்தான். அடுத்தபடியாக கியூபா நாட்டில் இது 92 வீதமாக உள்ளது. போர்ச்சுகல், சிலி போன்ற நாடுகள் 90 வீதம். மேலும், பல்வேறு நாடுகள் வாய்ப்புக்கேற்ப தமது குடிமக்களுக்கு தடுப்பூசி செலுத்தியுள்ளன. ஆனால், நைஜீரியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் 5 வீதத்துக்கும் குறைவான மக்கள்தான் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர். இது டிசம்பர் மாத புள்ளிவிபரமாகும்.

உலகமயமாக்கலால் உலகம் சுருங்கியபோது மகிழ்ந்த நாம் உலகளாவிய அளவில் நோய்த்தொற்று பரவும் வாய்ப்பு பெருகுவதையும் புரிந்துகொள்ள வேண்டும். வாய்ப்புள்ள அனைவரும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்யமுன்வர வேண்டும். வரலாறெங்கும் மனிதகுலம் அறிவியலின் துணைகொண்டு பல்வேறு இன்னல்களிலிருந்தும் மீண்டுள்ளது. இந்த வைரஸின் பிடியிலிருந்தும் மீளும். நம்பிக்கை கொள்வோம். வெறுமனே அரசின் மீதும் சுகாதாரத்துறை மீதும் விமர்சனங்களை முன்வைக்காமல் ஆளுக்காள் பொறுப்புடன் நடப்போம். அடுத்த வாரங்களில் ஒமிக்ரொன் தொற்று சமூகத்துக்குள் தீவிரமாக ஊடுருவும் வாய்ப்பிருப்பதாக சுகாதாரத்துறையினர் கூறியுள்ளதால் மக்கள் முன் உள்ள பொறுப்பு மிகவும் கனதியானது.

# வறுமைத்தணிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையில் வெற்றியளித்துள்ளனவா?

இலங்கையில் வறுமையை குறைப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டு நோக்கும் போது, இவை குறிப்பாக கிராமிய விவசாயத் துறையினையும் கைத்தொழில் துறையினையும் மேம்படுத்துவதனை நோக்காக கொண்டு காலத்துக்கு காலம் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இவ் நிகழ்ச்சித்திட்டங்களின் உள்நோக்கு சமூக அபிவிருத்தியே தவிர, நாட்டின் பொருளாதார துறையினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு காணப்படவில்லை. இதனடிப்படையில் நோக்கும்போது, இலங்கை பொருளாதார அபிவிருத்தியை விடவும் சமூக அபிவிருத்தியே அதிகமாக கவனத்தில் எடுக்கின்றது. ஆகவே, இவ்வகையில் ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் வறுமையினை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காக பின்வரும் தணிப்புத்திட்டங்களை முன்வைத்தனர்.

***1948 : உணவுமானியத் திட்டம்***

***1927 : உணவுமுத்திரைத் திட்டம்***
***ஜனசவிய நிகழ்ச்சித்திட்டம்***

***1994 : சமுர்த்தித் திட்டம்***

***2011 : திவிநெகும***

இத்திட்டங்களின் பலம் மற்றும் பலவீனம் ஆகியவற்றை ஆராய்வோமாயின், முதலில் பலம் தொடர்பில் நோக்குகையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் குறிப்பாக ஜனசவிய திட்டங்களால் வறிய மக்களின் தொழில் திறனை மேம்படுத்தல், வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல், வருமானத்தை அதிகரிக்க செய்தல், சேமிப்பினை ஊக்கப்படுத்தல் என்கிறதான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு ஜனசவிய திட்டம் செயற்படுத்தப்பட்டமை இத் திட்டத்தின் ஒரு பலமாக காணப்படுகின்றது. அடுத்து சமுர்த்தித் திட்டம் தொடர்பில் நோக்குகையில், சுயதொழில், ஊக்குவிப்பு வருமான மார்க்கங்களை உருவாக்குதல் பெண்கள் மற்றும் இளைஞர்களை அபிவிருத்தி செயற்பாடுகளில் இணைத்தல். அவர்களின் தீர்மானம் எடுக்கும் திறனை விருத்தி செய்தல், கூட்டாக தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தை அதிகரித்தல், மக்களுக்கான கடன்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வழிகளில் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாக காணப்படுதல் இதன் சிறப்பம்சமாகும்.

திவிநெகும திட்டம் 2011 கொண்டு வருகையில், வாழ்வின் எழுச்சித்திட்டமான திவிநெகுமத் திட்டத்தின் மூலமாக மரக்கன்றுகள், பழக்கன்றுகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மருத்துவ தாவரங்கள் மற்றும் மாதிரி வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தல், அத்துடன் கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, வீட்டுத்தோட்டம் என மூன்று கட்டங்களாகப் பிரித்து இத் திட்டத்தின் செயற்பாடு அமைந்துள்ளதுடன் வறுமைத் தணிப்புக்கு இவை ஓரளவு துணை புரிந்துள்ளது எனக் குறிப்பிடலாம்.

வறுமை ஒழிப்பதற்கான திட்டங்களும் தீர்வு முன்மொழிவுகளும் காலத்துக்கு காலம் முன்வைக்கப்பட்டாலும் வறுமைத் தணிப்பென்பது முற்றாக இடம்பெறவில்லை என்று குறிப்பிடலாம்.

1. இலக்குகள் அடையப்படாமையும் வினைத்திறன் அற்ற தன்மையும் காணப்படல்.

ஜனசவிய சமுர்த்தித் திட்டங்கள் போன்றன வறியவர்களை இலக்காகக் கொண்டு தொழில் திறனை மேம்படுத்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சேமிப்பினை வளர்த்தல் ஆகிய விடயங்களை இலக்காகக் கொண்டிருந்தாலும் ஏழைகள் மிகச்சரியாக அடையாளம் காணப்படாது பணக்காரர்களும் அத்திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டமை இத்திட்டத்தின் மிக முக்கியமான பலவீனமாகும்.

சுயதொழில் வாய்ப்பினை அறிமுகப்படுத்தல், வருமான மார்க்கங்களை உருவாக்குதல், பெண்கள் மற்றும் இளையவர்களை வலுவூட்டல் செயற்பாடுகள் போன்றவற்றில் போதிய திட்டமிடல், பங்கேற்பு இன்மை காரணமாக இத்திட்டம் தோல்வியடைந்து காணப்படுகின்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி வறுமை தணிப்புத் திட்டங்களை மிகச் சிறப்பாக மக்களுக்கு வழங்காமல் தமக்கு சார்ந்தவர்களுக்கு வழங்குகின்ற நிலை காணப்படுகின்றது. இத் திட்டங்களில் காணப்படுகின்ற அரசியல் மயமாக்களின் காரணமாக அரசியல் தலைமைப் பதவிகளில் உள்ள ஒருவர் தாம் சார்ந்த பகுதிகளை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றனர். ஏனைய பகுதியினர் இவ் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் கிடைக்கப் பெறமையால் பாதிக்கப்படுகின்றனர். வறுமை ஒழிப்புத் திட்டம் காலத்துக்கு காலம் அறிமுகம் செய்யப்பட்டாலும் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான எவ்வித உறுதிப்பாட்டுத் தன்மையும் காணப்படவில்லை. காலத்துக்கு காலம் அறிமுகம் செய்யப்பட்ட அனைத்து வறுமை ஒழிப்புச் செயற்திட்டங்களும் அரசாங்கத்தின் சுயநலத்துக்காக மேற்கொள்ளப்பட்டவையே தவிர, பொதுமக்களின் நலன்களினைக் கருத்திற் கொள்ளப்படவில்லை.

தற்போதைய அரசாங்கமானது, வறுமையை ஒழிப்பதற்காக குறைந்த வருமானமுடைய வர்களுக்கு தொழில் வழங்கும் திட்டம் இலங்கையில் செப்டெம்பர் 2ஆம் திகதி தொடங்கியது. அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப் பட்டுள்ள பல்துறை அபிவிருத்தி செயலணி மூலமாக குறைந்த வருமானமுடைய மற்றும் தேர்ச்சி பெறாதவர்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்துவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகக் காணப்பட்டது. இன்று உலகம் முழுவதிலும் வறியவர்களுக்கும் செல்வந் தர்களுக்குமிடையிலான இடைவெளியானது, அதிகரித்துச் செல்கின்ற 80வீதமான சொத்துக்கள் உலகில் 20வீதமான செல்வந்தர் களிடமே காணப்படுகின்றது. உலக வங்கியின் கருத்துப்படி, இலங்கைத்தீவில் தீவிர வறுமையை அனுபவிப்பவர்கள் 0.73வீதம் எனக் கூறுகின்றது. இதனடிப்படையில் நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளில் ஒன்றாக வறுமையினை 2030ஆம் ஆண்டில் 0வீதம் என்ற அளவுக்கு குறைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தென்னாசிய நாடுகளில் மிகக் குறைந்த வறிய மக்களை (4.1வீதம்) கொண்ட நாடாக இலங்கை இருப்பதுடன், நேபாளத்தில் (25.2வீதம்) பங்களாதேஷில் (24.3வீதம்), இந்தியாவில் (21.9வீதம்) என வறுமை உயர்ந்த நிலையில் இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தரவுகள் கூறுகின்றன.

இவ்வாறு இலங்கையில் வறுமையைத் தணிப்பதற்காக அரசு முன்னெடுத்த உணவு மானிய முத்திரைத் திட்டம், உரமானியத் திட்டம், ஜனசக்தி உதவித் திட்டம், சமுர்த்தி திவிநெகும; கம்பெரலிய என்ரபிரைசஸ் ஸ்ரீலங்கா போன்ற குறுங்கால மற்றும் மகாவலி கல்லோயா போன்ற நீண்டகால பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் எனப்பல காரணங் கள் தென்னாசியாவுடன் ஒப்பிடுகின்றபோது வறுமையைத் தணித்துள்ளது.

**• சி.குகதாசன்**
***அரசறிவியற்றுறை***
***யாழ்.பல்கலைக்கழகம்***

# இணைய மயமாகும் பறவை பார்த்தல்




பறவை பார்த்தல் என்பது உலகின் மிகப் பெரிய பொழுதுபோக்குகளுள் ஒன்று. ஆனால், இதற்கென கானகத்துக்குப் போகவேண்டுமே என்று நினைப்போருக்கு உதவ வருகிறது அமெரிக்காவைச் சேர்ந்த பேர்ட் படி (mybirdbuddy.com). இயற்கைக்கும், ஆர்வலர்களுக்கும் நேரடி தொடர்பை ஏற்படுத்துவதுதான் நோக்கம் என்கின்றனர் இதனை நிறுவியவர்கள்.

பேர்ட் படி என்பது ஒரு நவீன பறவைக்கூண்டு. அதில், பறவைகளுக்கான இரையை வெளியேற்றும் வசதி உண்டு. மேலும், இரை உண்ண வரும் பறவைகளை புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கும் வசதியுள்ள கெமராவும் இந்தக் கூண்டோடு இணைக்கப்பட்டுள்ளது.

பறவை ஆர்வலர் இந்தக் கூண்டை வாங்கி, தனது வீட்டு மாடி அல்லது பின்புறத் தோட்டத்தில் நட்டுவைத்து விடலாம். பறவைகள் வந்து அமர்ந்ததும், கூண்டே புகைப்படம் எடுத்து ஆர்வலரின் மொபைலில் உள்ள பேர்ட் படி செயலிக்கு அனுப்பிவிடும். அருகே இருந்தால், ஆர்வலர் சத்தமில்லாமல் வந்து, கூண்டில் தீனி தின்னும் பறவையை ரசிக்கலாம்.

வீடு தேடி வரும் பறவைகளின் புகைப்படங்களை சேகரிப்பதை ஒரு வீடியோ கேம் போலவே பேர்ட் படியின் நிறுவனர்கள் வடிவமைத்துள்ளனர். போகேமேன் கோ வீடியோகேம் போலவே இதிலும், ஒவ்வொரு புதுமையான பறவையின் புகைப்படத்துக்கும் கூடுதல் புள்ளிகள், பெட்ஜ்கள் போன்றவற்றை வெல்ல முடியும்.

வழக்கமாக பறவை பார்த்தலில் ஆர்வமுள்ளவர்களால் புகைப்படங்களை எடுக்க முடியாது. ஆனால், பேர்ட் படியை வாங்கி வைப்பவர்களால், வந்து செல்லும் ஒவ்வொரு பறவையின் படத்தையும் தவறாமல் எடுக்க முடிவதோடு, அவற்றை சேமிக்கவும், பிறருக்கு காண்பிக்கவும் முடியும்.

பேர்ட் படி வைத்திருப்போர், சமூக வலைத்தளங்களில் தங்கள் வீட்டுக்கு வந்த பறவை விருந்தாளிகளைப் பற்றி பெருமையுடன் பகிர முடியும். அதே விருந்தாளி இன்னொரு பேர்ட் படி வைத்திருப்பவரின் வீட்டுக்கும் வந்திருந்தால் அதையும் உடனே கண்டுகொள்ள முடியும். விரைவில், செயலியே அரிய பறவைகளை இனம் கண்டுபிடிக்கும் வசதியை அறிமுகப்படுத்தவுள்ளனர்.

# இன்றைய நாளில்...

- **1704 – முகாலய-சீக்கியப் போரில், சீக்கிய கால்சாக்கள் முகாலய இராணுவத்தினரைத் தோற்கடித்தனர்.**
- **1768 – பிரித்தானியா கலைக்களஞ்சியத்தின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது.**
- **1877 – தி வொஷிங்டன் போஸ்ட் செய்திப்பத்திரிகையின் முதலாவது இதழ் வெளிவந்தது.**
- **1897 – வாடகை வாகனங்கள் உலகில் முதற்தடவையாக லண்டனில் சேவைக்கு விடப்பட்டன.**
- **1971 – இந்தியா வங்காள தேசத்தை அங்கீகரித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்தியாவுடனான அனைத்து தூதரக உறவுகளையும் துண்டித்தது. 1971 இந்திய-பாகிஸ்தான் போர் வெடித்தது.**
- **1992 – அயோத்தியில் இராமர் பிறப்பிடத்தில் கட்டப்பட்ட பாபர் மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து இடம்பெற்ற கலவரங்களில் 1,500 பேர் வரை உயிரிழந்தனர்.**
- **2006 – செவ்வாய்க் கோளில் இருந்து மார்ஸ் குளோபல் சேர்வயர் அனுப்பிய படங்களில் இருந்து அங்கு நீர் திரவ நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தியதாக நாசா அறிவித்தது.**

# நக்கல் நமசிவாயம்



# பாரிய படகு அனர்த்தம் நெடுந்தீவில் தவிர்க்கப்பட்டது

## தெய்வாதீனமாக பயணிகள் தப்பினர்



(யாழ். செய்தியாளர்)

நெடுந்தீவு – குறிகட்டுவான் இடையிலான கடற் போக்குவரத்து சேவை இடம்பெற்றபோது பாரிய அசம்பாவிதம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகளுடன் நேற்றுக் காலை புறப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திர தேவி படகு இடை நடுவில் பழுதடைந்த நிலையில் பின்னர் வடதாரகைப் படகின் உதவியுடன் குறிகட்டுவான் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

சுக்கான் தடி உடைந்தமையினால் இடைநடுவில் பயணிகளை வடதாரகைப் படகுக்கு மாற்ற முடியாத நிலையிலும் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் வடதாரகைப்படகு இழுத்துச் செல்லப் பட்டது.

நெடுந்தீவில் இருந்து காலை 07 மணிக்கு புறப்பட்ட மக்கள் காலை 10.00 மணியினை அண்மித்தே குறிகட்டுவான் இறங்கு துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

வீடியோவைக் காண...

# ஹெரோயின் போதைப்பொருளுடன் அநுராதபுரத்தில் ஒருவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் மாலை அநுராதபுரம் சேனாநாயக்க மாவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 5 கிராம் 550 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் வன்னியன்குளம் அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 51 வயதுடையவர் என்பது தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேக நபர் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் இதற்கு முன்னரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் என்பது மேலதிக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 05.01.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 031 57 | 037 670 |
| கனேடியன் டொலர் | 044 160 | 05 786 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 7640 | 21 0240 |
| யூரோ | 112 4445 | 121 2635 |
| ஜப்பான் யென் | 0 6 6 | 0 6542 |
| சிங்கப்பூர் டொலர் | 034 783 | 04 4871 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 31 0 | 164 730 |
| சுவிஸ் பிராங் | 104 2 63 | 111 8583 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 423 8740 |
| குவைட் | குவைட் தினார் | 555 1 8 |
| ஓமான் | ஓமான் றியால் | 412 80 2 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 2880 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 6004 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8046 |

# யாழில் ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு







(யாழ். செய்தியாளர்)

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் புத்தசாசன மதவிவகார கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில், வடக்கு மாகாணத்தின் அரசாங்க கொள்கைப் பிரமாண அடிப்படையில் ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணத்தில் நேற்று (05) இடம்பெற்றது.

எதிர்வரும் 2022ஆம் ஆண்டுக்கான மிகச்சிறந்த முறையிலான வரவு-செலவுத் திட்டத்தின் மக்களின் முன்மொழிவுகளுக்கு ஏற்ப திட்டங்களை உருவாக்கும் நோக்கத்தினை ஊடகங்களால் மக்களுக்கு தெளிவுபடுத்தல் தொடர்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றும் அரச தகவல் திணைக்கள பதவிநிலை அலுவல்கள் உத்தியோகத்தர்கள், மாவட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஊடகவள பயிற்சியினை கற்றுவரும் மாணவர்களுக்கு தெளிவூட்டும் வகையில் யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

## தத்துவம் தங்கராசு



இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து சுசில் பிரேமஜயந்தவை ஜனாதிபதி நீக்கியமை குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கடும் விமர்சனங்களை தெரிவித்துள்ளார்.

இவ்வளவு காலம் அமைதியாக இருந்த மைத்ரி, இப்போது பகிரங்கமாக வெளியேவந்து பேச ஆரம்பித்துவிட்டார். அரசுக்குள் இருப்பவர்கள் பொதுவெளியில் எதையும் பேசவேண்டாமென ஜனாதிபதி அமைச்சரவையில் கூறிய மறுநாளே மைத்ரி அதிரடியாக பேசியிருக்கிறார்.

இப்போது மைத்ரிக்கு எதிராக என்ன செய்யும் ராஜபக்ஷ அரசு? என்ற கேள்வி எழுந்தாலும், இப்போதைய சூழ்நிலையில் மைத்ரிக்கு எதிராக என்ன செய்தாலும் அது மைத்ரிக்கு ஆதரவாகவே போய்விடும்.

ஏற்கனவே, உயிர்த்த ஞாயிறு தினதாக்குதல் விடயத்தில் மைத்ரியின் அசட்டையீனம் குறித்து விசாரிக்கப்பட வேண்டுமென கோரிக்கை இருந்தாலும், இப்போது அதுவும் லேட் போல் தான் தெரிகிறது.

அது இருக்கட்டும். இப்போது சுசிலை பதவி நீக்கியமைக்காக கண்டனம் தெரிவிக்கும் மைத்ரி, 2015ஆம் ஆண்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலராக இருந்த இதே சுசிலை பதவியில் இருந்து தூக்கியமை நினைவிருக்கிறதா? மக்கள் எல்லாம் மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறார் மைத்ரி.

இந்த ஆட்சியாளர்கள் மீது குறையுண்டு. அதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், ஆட்சியை இப்படித்தான் நடத்தவேண்டும் என்று சொல்லுமளவுக்கு மைத்ரி நல்ல நிர்வாகியல்ல...

# மஹிந்த யாப்பாவுக்கு சீன சபாநாயகர் வாழ்த்து

## தூதுவர் ஊடாக அனுப்பிவைப்பு

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங் நேற்று (05) முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்ததுடன், சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) லீ சன்ஷுவின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை சபாநாயகரிடம் கையளித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு ஒத்துழைப்பை இவ்வருடத்தில் பலப்படுத்துவதற்கு உறுதியுடன் இருப்பதாக சீனத் தூதுவர் இங்கு சுட்டிக்காட்டினார். வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்தமைக்காக சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் லீ சன்ஷுவுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நன்றி தெரிவித்தார்.



இலங்கைக்கு சீனா தொடர்ந்து வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் இதன்போது நன்றி பாராட்டினார். இச்சந்திப்பின் போது நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீரவும் கலந்துகொண்டார்.



# கல்னேவவில் வீடொன்று எரிந்து முற்றாக நாசம்

## சந்தேகத்தில் உரிமையாளரின் மருமகன் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம், கல்னேவ பகுதியிலுள்ள வீடொன்று தீயினால் எரிந்து நாசமாகியுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக கல்னேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கல்னேவ பொலிஸ் பிரிவிலுள்ள புள்னேவ தொறஹத்தர பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற போது வீட்டு உரிமையாளர் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் எவரும் இருக்காத காரணத்தினால் உயிராபத்துகள் எதுவும் இடம்பெறவில்லையென்பதுடன் வீடு முற்றாக தீக்கிரையாகியுள்ளது என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளரின் 35 வயதான அப்பகுதியை வசிப்பிடமாக கொண்ட மருமகனை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எம்.எம்.ஆர்.சீ. முனசிங்கவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நந்தவன வெள்ளி விழாவில் பங்கேற்க புரவலர் இந்தியா விஜயம்




மக்கள் மேம்பாட்டு மாத இதழான நந்தவனம் சஞ்சிகையின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு இலக்கியப்புரவலரும் புரவலர் புத்தகப்பூங்கா நிறுவுனருமான ஹாஷிம் உமர், நாளை வெள்ளிக்கிழமை இந்தியா செல்லவுள்ளார்.

இதனையொட்டிய நிகழ்வுகள் திருச்சி, ஹோட்டல் செவனாவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09) காலை ஒன்பது முப்பது மணி முதல் நண்பகல் ஒருமணிவரை இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வை, புரவலர் ஹாஷிம் உமர், சேலத்தைச் சேர்ந்த முனைவர் கலையமுதன், தஞ்சாவூர் புனிதாகணேசன் மற்றும் லயன் டாக்டர் திருச்சி அச்சர்சிங் ஆகியோர் அலங்கரிக்கவுள்ளனர்.

இவ்வெள்ளி விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள சிறப்பு மலரின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்ளும் புரவலர் ஹாஷிம் உமர், அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







தொழில் ரீதியாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்குமாறுகோரி வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரால் கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நேற்று (05) ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# முறையான சம்பளமின்மையால் பெருந்தோட்ட மக்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க வேண்டும்



## வடிவேல் சுரேஸ் எம்.பி. கோரிக்கை

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் அதிகளவு பாதிப்புக்குள்ளாகியிருப்பது மலையக மக்களேயாகும். அவர்களுடைய அடிப்படை வேதனம் ஆயிரம் ரூபா வழக்கு நீதிமன்றத்தில் கிடக்கின்ற இச்சூழ்நிலையில், அவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் நேற்று (05) தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவின் காரணமாக, குறைந்த வருமானம் பெறும் மலையக மக்களே அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். விசேடமாக மலையக மக்களிடையே கோதுமை மா பாவனை அதிகளவில் காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில், கோதுமை மாவின் விலையேற்றம் அவர்களுக்கு பேரிடியாகவே அமைந்திருந்தது. அதற்கு உரிய நிவாரணம் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஆணித்தரமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் எடுத்துரைத்தேன்.

எவ்வாறிருப்பினும், காலம் கடந்து ஒரு ஞானம் பிறந்திருக்கின்றது. நிதி அமைச்சரால் முன்மொழியப்பட்டிருக்கின்ற பெருந்தோட்ட மலையக மக்களுக்கான கோதுமைமா சலுகை வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த விடயம் நடைமுறையில் சாத்தியப்பட வேண்டும். எவ்வாறான நடைமுறையின்கீழ் மலையக மக்களுக்கு 80 ரூபா விலை குறைப்புக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது என்ற திட்டம் தெளிவாக்கப்படல் அவசியமாகும்.

அத்துடன், கோதுமை மாவிற்கு மட்டுமல்லாமல், ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும். மலையக பெருந்தோட்ட மக்கள் பாரியதொரு நிதி நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய ஓர் சூழ்நிலையிலேயே அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மலையகப் பெருந்தோட்ட மக்களும் இந்நாட்டின் பிரஜைகளே. ஏற்கனவே அவர்களுடைய அடிப்படை வேதனம் ஆயிரம் ரூபா வழக்கு நீதிமன்றத்தில் கிடையில் கிடக்கின்றது. இச்சூழ்நிலையில் அவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். நாட்டினுடைய பொருளாதார பின்னடைவில் ஆகக் கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பது, பெருந்தோட்ட மலையக மக்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆகவே, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெருந்தோட்ட மலையக மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பது எனது கோரிக்கையாகும்.

ஆகவே, பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் , நிதி அமைச்சர் இதற்கும் ஓர் ஆக்கபூர்வமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதை மலையக மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன்.



நுவரெலியா காலில்ஸ் கிராவுண் பகுதியில் உள்ள பாதை மிகவும் மோசமான நிலையில் மக்கள் நடக்க முடியாத வகையில் காணப்பட்டதோடு, மழைக்காலங்களில் குழிகளில் மழைநீர் நிறைந்தும் காணப்பட்டது. பொது மக்கள், வாகன சாரதிகள் மற்றும் இப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் படும் இடர்களை கருத்திற்கொண்டு, நுவரெலியா மாநகரசபையினால் இப்பாதை காபட் இடப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருவதை படங்களில் காணலாம். (படங்கள்: செ.திவாகரன்)

# இ.போ.ச. – தனியார் பஸ் சாரதிகளுக்கிடையே மோதல்

## ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதி

(பதுளை நிருபர்)

இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிக்கும் தனியார்துறை பஸ் சாரதிக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், இ.போ.ச. பஸ் சாரதி கடுங்காயங்களுக்குள்ளாகி ஹல்துமுள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம், ஹல்துமுள்ளையில் நேற்று (05) இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தை அறிந்து ஹல்துமுள்ளை பொலிஸார், சம்பவ இடத்துக்கு விரையும்முன், தனியார் பஸ் சாரதி தமது பஸ் வண்டியை செலுத்திக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார்.

தற்போது அச்சாரதி கொழும்புக்கு சென்றிருப்பதாக தெரிவித்த பொலிஸார், அங்கு அவரையும், பஸ் நடத்துனரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக ஹல்துமுள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

படல்கும்பரையிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ் சாரதியே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

தனியார்துறை பஸ் ஒன்றும் இ.போ.ச. பஸ் ஒன்றும் கொழும்பை நோக்கி போட்டி போட்டுக்கொண்டு, பயணிகளை ஏற்றிச் சென்ற வேளையிலேயே, இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது மோதலாக மாறியுள்ளது. தனியார்துறை பஸ் சாரதியும் நடத்துனருமே இ.போ.ச. பஸ் சாரதியை பஸ்ஸிலிருந்து வெளியில் இழுத்து கடுமையாகத் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தில் கடுங்காயமுற்ற இ.போ.ச. பஸ் சாரதி ஹல்துமுள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பஸ் நேர அட்டவணையில் ஏற்பட்ட குளறுபடியே, இச்சம்பவத்துக்கு காரணமென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக ஹல்துமுள்ளை பொலிஸார் இது தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மறைமுக கூட்டு வைத்திருக்கும் அரசாங்கமும் கம்பனிகளும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக்குகின்றன

## உரிமை போராட்டத்துக்கு மக்கள் தயாராகுமாறு மத்திய மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ராஜாராம் அழைப்பு

(தலவாக்கலை நிருபர்)

அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். அரசாங்கமும் முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒரு கூட்டு வைத்துக்கொண்டு நாடகமாடுகின்றது. இதற்கு தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் இடமளிக்கக்கூடாது என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். ராஜாராம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (05) நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மலையகத்தின் விடுதலையாக இருக்கட்டும் அல்லது புரட்சியாக இருக்கட்டும். அது தொழிற்சங்கம் மூலமே ஆரம்பமாகியுள்ளது. கடந்த கால வரலாறுகளை பார்த்தால் தொழிலாளர்கள் உயிர்த் தியாகம் செய்து தோட்டங்களையும் தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களையும் பாதுகாத்துள்ளார்கள்.



அவ்வாறு உயிர்த் தியாகம் செய்து பாதுகாத்த தொழிற்சங்கங்களை தோட்ட நிர்வாகங்களும் அரசாங்கமும் இல்லாமல் செய்வதற்கு முயற்சி செய்கின்றது. அதற்கு தொழிலாளர்கள் இடமளிக்கக்கூடாது. அரசாங்கமும் முதலாளிமார் சம்மேளனமும் மறைமுகமாக கூட்டு வைத்துக்கொண்டு தொழிலாளர்களை கொத்தடிமைகளாகவும் சர்வாதிகாரமாகவும் வழிநடத்துகின்றனர்.

இதனை தட்டிக்கேட்பதற்கு தொழிற்சங்கங்களை வலுவிலக்கச் செய்துள்ளார்கள். எனவே, தொழிலாளர்கள் ஒன்றிணைந்து மீண்டும் தொழிற்சங்கங்களை சக்தியுள்ள தொழிற்சங்கமாக மாற்றியமைத்து தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளை தட்டிக் கேட்டு உரிமை போராட்டம் நடத்த தொழிலாளர்கள் தயாராக வேண்டும்.

மறைந்த அமைச்சர் பெ.சந்திரசேகரனால் ஓர் புரட்சியுடன் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணி சலுகை சார்ந்த அரசியல் கட்சியல்ல, இந்த கட்சி உரிமை சார்ந்த கட்சியாகும். நாம் எமது உரிமைகளை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்க முடியாது. எமது உரிமைகளை நாம் தட்டிக் கேட்பதற்கு அனைத்து தொழிலாளர்களும் எம்முடன் இணைந்து போராடத் தயாராக வேண்டும் என்றார்.



பிறந்துள்ள புதுவருடத்தை முன்னிட்டு நுவரெலியா பிரதேச சபையின் காரியாலய வேலைகளை சம்பிரதாயமாக ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று நுவரெலியா பிரதேசசபை உறுப்பினர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான சத்தியப் பிரமாணம் செய்து பால் பொங்கி கடமைகளை ஆரம்பித்தனர். (படங்கள்: செ.திவாகரன்)

# கொடக்கவெல பெரனிம் கொங்ரீட் பிரிவு நவீன முறையில் அபிவிருத்தி செய்து திறப்பு



(இரத்தினபுரி நிருபர்)

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக்கமைய சப்ரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் கொடக்கவெல பெரனிம் கொங்ரீட் பிரிவு நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் (4) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் திறந்து வைக்கப்படடது.

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநரினால் 60 இலட்சம் ரூபா பெறுமதியான கொங்கிரீட் பிரிவுக்கு தேவையான இயந்திர உபகரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், பிரதி பிரதான செயலாளர்களான அஜித் பனாகொட, பராக்கிரம பியசேன மற்றும் சப்ரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரூபசிங்க, சப்ரகமுவ மாகாண நிர்மாண அபிவிருத்தி இயந்திர அதிகார சபையின் தலைவர் அநுர அலகியவன்ன உட்பட அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர்.

# பட்டதாரிகள், டிப்ளோமாதாரர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கமைய பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், ஊவா மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு பயிற்சி அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நேற்றுமுன்தினம் (04) பதுளை நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

ஊவா மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களுக்குப் பயிற்சி அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 500 வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ள அதேவேளை, முதற்கட்டமாக பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரத்து 02 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய, மாகாண நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட குறித்த பட்டதாரிகள் அனைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இவர்கள் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்களுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

# கந்தப்பளை – கோனப்பிட்டிய வீதியுடனான போக்குவரத்து தடை



(செ.திவாகரன்)

நுவரெலியா கந்தப்பளை-கோனப்பிட்டிய வீதியுடனான போக்குவரத்து நேற்று (05) காலை முதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

கோனப்பிட்டிய- கல்கந்தை எனும் இடத்தில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற மண்சரிவு காரணமாக, இந்த வீதியுடனான போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று, வீதியில் சரிந்துள்ள மண் மற்றும் கற்களை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக இராகலை மற்றும் மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக நீரிழிவு மாதத்தில் NCD பரிசோதனை கிளினிக்கை செயற்படுத்தியதன் மூலம் "ஆரோக்கியமான வாழ்க்கையை" வழங்கும் ஹேமாஸ் மருத்துவமனை




சுகாதாரத் துறையில் சர்வதேச ACHSI தரத்தை எட்டிய இலங்கையின் முதல் தனியார் மருத்துவ மனை சங்கிலியான Hemas மருத்துவமனைக் குழுமம், உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு பள்ளியாவத்தை பகுதியில் உள்ள மீனவ சமூகத்தின ருக்காக அண்மையில் விரிவான நீரிழிவு மற்றும் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சையகத்தை (Clinic) நடத்தியது. X-Press Pearl அனர்த்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மீனவ சமூகங்களை மேம்படுத்துவதற்காகவே ஆரம்பிக்கப்பட்ட மீன்பிடி ஊக்குவிப்பு சமூக பொறுப்புணர்வு செயற்பாட்டு (CSR) திட்டத்தின் இரண்டாவது திட்டமாக இந்த சிகிச்சையகம் அமைந்திருந்தது.

அருட்தந்தை அஜித் திசேராவின் ஆசீயுடன் பள்ளியாவத்தை மவுண்ட் கார்மல் தேவாலயத்தில் சிகிச்சையகம் நடைபெற்றது. 250க்கும் மேற்பட்டவர்களுக்கு இலவச நீரிழிவு மற்றும் NCD பரிசோதனை மற்றும் தொடர்புடைய சிகிச்சையை வழங்குவதன் மூலம் 250க்கும் மேற்பட்டவர்கள் பலப்படுத்தப்பட்டுள்ளனர். அத்தியாவசிய மருத்துவ சேவையை வழங்குவதற்கான இந்த அணுகுமுறை அனைத்து உள்ளூர் மக்களாலும் மிகவும் பாராட்டப்பட்டது.

"COVID-19 தொற்றுநோய்களின்போது நீரிழிவு போன்ற தொற்றாத நோய்கள் வேகமாகப் பரவுவது ஒரு பெரிய சுகாதாரப் பிரச்சினையாகும். சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின்படி, இலங்கையில் 12 பேரில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இலங்கை மக்கள் மத்தியில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். எனவே, இந்த உலக நீரிழிவு மாதத்தில், மீன்பிடி ஊக்குவிப்பு செயற்பாட்டின் அனுசரணையில் நீரிழிவு மற்றும் தொற்றாதநோய் கண்டறிதல் கிளினிக்குகளை வெற்றிகரமாக நடத்துவது குறித்து நாம் பாக்கியமாக கருதுவதுடன், X-Press Pearl அனர்த்தத்திலிருந்து விடுபடுவதற்கு இன்னும் போராடிக்கொண்டிருக்கும் எமது மக்களை வலுப்படுத்தவும் ஊக்குவிக்கவும் முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்"

"நீரிழிவின் தாக்கத்தின் தீவிரத்தை தினசரி அடிப்படையில் அனுபவிக்கும் ஒரு பொறுப்புள்ள சுகாதாரத் தலைவராக, இந்த அமைதியான அச்சுறுத்தலின் விளைவுகளைத் தணிக்க நாம் தொடர்ந்து முதலீடு செய்வோம்" என டொக்டர் லகித் பீரிஸ், ஹேமாஸ் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகக் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு ஹேமாஸ் குழும தொடக்கத்துக்கு சமாந்திரமாக, மீன்வள ஊக்குவிப்பு நீரிழிவு கிளினிக் மூலம் பொதுமக்களுக்கு அவர்களின் வாழ்க்கையை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் எவ்வாறு தங்கள் உடல் நலனைக் கவனித்துக் கொள்வது மற்றும் நிர்வகிப்பது என்பது குறித்த விழிப்புணர்வை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

ஹெல்த்கேர் தரநிலைகளுக்கான அவுஸ்திரேலிய கவுன்சிலால் (ACHSI) சான்றளிக்கப்பட்ட இலங்கையில் தற்போது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை வலையமைப்பாக Hemas Hospitals குழுமம் திகழ்கிறது. மேலும் பாதுகாப்பு, தரம் மற்றும் சிறந்த மருத்துவ விளைவுகளுக்கான சர்வதேச மருத்துவமனை அங்கீகாரத்தின் தங்க முத்திரையாக உள்ளது. உலக சுகாதார அமைப்பின் (WHO) வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட கொவிட்-19 பாதுகாப்பு செயல்பாடுகள் சுகாதார நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிப்பது பற்றிய விரிவான மற்றும் பலதரப்பட்ட படிமுறை தணிக்கையைத் தொடர்ந்து, ஹேமாஸ் மருத்துவமனைகள் குழுமத்துக்கு SLS 1672: 2020 சான்றிதழை SLSI வழங்கியது. ஹேமாஸ் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களும் ISO 15189 (2012 சான்றிதழ்) பெற்றுள்ளது.

# Fresh Dry Technology உடன் தொழில்துறையில் புதிய மைல்கல்லைக் கடக்கும் N-Joy




இலங்கையின் முன்னணி தேங்காய் எண்ணெய் வர்த்தகநாமமான N-Joy, நவீன உற்பத்தி செயல்முறை யான Fresh Dry Technology (FDT)ஐ பின்பற்றி தேங்காய் எண்ணெய் தொழில்துறையில் ஒரு புதிய மைல்கல்லைப் பதிவுசெய்து, உலகளாவிய தரத்தை உறுதிசெய்துள்ளது.

உணவுப் பாதுகாப்புத் தரங்களின் உலகளாவிய பயன்பாடுகளை நெருக்கமாக கடைப்பிடித்து, உற்பத்தி செயல்முறையைத் தானியங்குபடுத்துவதற்கும், பொருட்களுடன் மனித தொடர்பைக் குறைப்பதற்கும் உள்ள ஒரே உள்ளூர் நிறுவனம் இதுவாகும். RBD (சுத்திகரிக்கப்பட்ட, ப்ளீச் செய்யப்பட்ட மற்றும் சுவையூட்டப்பட்ட) செயல்முறைக்கு உட்படாத, சுகாதாரமான, உயர்தர தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு FDT உத்தரவாதம் அளிக்கிறது.

"எமது நிறுவனம் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக வளர்ச்சியடைந்து வெற்றியடைந்து வருகிறது. எமது உள்ளூர் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட பாரம்பரிய தேங்காய் எண்ணெயை முன்னோக்கி எடுத்துச் செல்வதன் மூலம், நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு இரசாயன சுத்திகரிப்புக்கு உட்படாத இயற்கையான தயாரிப்பை வழங்குகிறோம். சர்வதேச தரத்துக்கு உற்பத்தியை உறுதிசெய்யும் வகையில், எமது புதிய தொழில்நுட்பம் அளவீடு செய்யப்பட்டுள்ளதால், இரசாயனப் பொருட்கள் இல்லாத சிறந்த, தரமான இயற்கை மற்றும் ஆரோக்கியமான தயாரிப்பை இப்போது நுகர்வோருக்கு வழங்குகிறோம்"

"இலங்கையில் இந்தப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரே நிறுவனம் நாங்கள்தான். நாம் எப்போதும் தரத்தில் கவனம் செலுத்துகிறோம், மேலும், எமது வாடிக்கையாளர்களுக்கு இந்த தயாரிப்பை வழங்குவதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என AadamjeeLuckmanjee & Sons இன் முகாமைத்துவப் பணிப்பாளர் முர்தசா லுக்மன்ஜீ தெரிவித்தார்.

இலச்சினை மீதான நுகர்வோர் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்த, N-Joy இனால், "உண்மையான தேங்காய் எண்ணெயை அடையாளம் காணுங்கள்" வணிகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இது தயாரிப்பில் உள்ள QR குறியீடு மூலம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தர உத்தரவாதத்துக்கான அணுகலை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

"எமது தயாரிப்பு மீதான வாடிக்கையாளர் நம்பிக்கை எமக்கு மிகவும் முக்கியமானது. N-Joy தூய தேங்காய் எண்ணெயின் ஒவ்வொரு போத்தலிலும் உள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தி எமது தயாரிப்பின் உண்மையான தரத்தைப் புரிந்துகொள்ள வாடிக்கையாளர்களை அழைக்கிறோம். இந்த முயற்சியின் மூலம், எமது நம்பிக்கையை மேலும் வலுப்படுத்த நாம் முயற்சிசெய்கிறோம். மேலும், இந்த பண்டிகைக் காலத்தில் சந்தையில் மிக உயர்ந்த தரமான எண்ணெய்களை எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு வழங்க உறுதியளிக்கிறோம்" என N-Joyஇன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் துவிந்திர கோரயா தெரிவித்தார்.

AadamjeeLuckmanjee & Sons Groupஇன் உறுப்பி னரான N-Joy இலங்கையில் ஒரு முன்னோடி உற்பத்தியாளர் மற்றும் தூய தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியாளர். இது இரசாயனப் பொருட்கள் அடங்காத உற்பத்தி செய்யப்படும் இயற்கை எண்ணெய் ஆகும். அதன் தாய் நிறுவனமான N-Joyஇன் 150 வருட அனுபவத்தால் ஈர்க்கப்பட்டு, ISO 22000 சான்றிதழுடன் நுகர்வோருக்கு தூய தேங்காய் எண்ணெயை வழங்குவதற்காக பல ஆண்டுகளாக பல விருதுகளை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# CA Sri Lanka's Annual Report 2021 விருது வழங்கும் நிகழ்வில் நவலோக்க மருத்துவமனை குழுமம் தொடர்ந்து 6ஆவது ஆண்டாக சுகாதார சேவைக்கு தங்க விருதை வென்றது




நாட்டிலுள்ள தனியார் மருத்துவமனை துறையில் முன்னோடியாக இருக்கும் நவலோக்க மருத்துவமனைக் குழுமம், 56ஆவது CA Sri Lanka வருடாந்த அறிக்கை 2021 விருது வழங்கும் நிகழ்வில், தொடர்ந்து 6ஆவது ஆண்டாக சுகாதாரத்துறையில் தங்க விருதை அண்மையில் வென்றது. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் சந்தைத் தலைமையானது சவாலான நேரத்தில், சுகாதாரப் பாதுகாப்புத்துறைக்கு சிறந்த பெறுமதியை சேர்ப்பதில் நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் திறனில் உள்ளது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சிறந்த நிறுவன நிர்வாகம் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு ஆகியவற்றில் மற்ற போட்டியாளர்களை விட சிறப்பாக செயல்பட முடிந்தது.

நவலோக்க மருத்துவமனைகள் குழுமத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச இந்த மாபெரும் சாதனை குறித்து கருத்து தெரிவிக்கையில், "சர்வதேச தரநிலை மருத்துவமனை சேவைக்கான அர்ப்பணிப்புடன் மிகவும் வெளிப்படையான நிர்வாகத்தை நிறுவுதல் உட்பட கணக்கியல் கொள்கைகளை வலுவாக பின்பற்றுவது இந்த வெற்றிக்கு ஒரு சக்திவாய்ந்த காரணியாக இருந்தது. தொடர்ந்து 5 வருடங்கள் இந்த நிலையை நிலைநிறுத்துவதும் பெரும் சவாலாகவே உள்ளன. ஆனால், அந்த சவாலை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம் என்பதற்கு இந்த வெற்றி ஒரு நல்ல அறிகுறி என நினைக்கிறேன். இந்த வெற்றிக்காக அயராது உழைத்த எமது ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என கலாநிதி ஜயந்த தர்மதாச தெரிவித்தார்.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தினால் சர்வதேச கணக்கியல் தரநிலைகளுக்கு (International <IIRC> Framework) தானாக முன்வந்து மாற்றியமைக்க முடிந்தது மற்றும் உலகளாவிய அறிக்கையிடல் அணுகுமுறைகளின் தரங்களுக்கு இணங்க, ஒரு விரிவான வருடாந்திர அறிக்கையை தொகுக்க முடிந்தது. அனைத்து தரப்பினருக்கும் தனது சேவைகளின் மதிப்பை மேம்படுத்தும் நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வையைத் தொடர்ந்து, Six Capital Reporting Framework முறைகளின்படி அதன் ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையை சமர்ப்பிக்க முடிந்தது.

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இந்த மதிப்புமிக்க விருது வழங்கும் நிகழ்வு, நிறுவனங்களின் நிதி மற்றும் நிதி அல்லாத தகவல்களை மிகவும் நம்பகமான மற்றும் நிலையான முறையில் முன்வைக்க நிறுவனங்களை ஊக்குவிக்கிறது. விருதுகளுக்கான நிறுவனங்கள், தனிப்பட்ட முறையில் மற்றும் பொது நிர்வாகமாக அது செய்யப்பட்ட சிறப்பான விதம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

**நவலோக்க மருத்துவமனைக் குழுமம் தொடர்பாக:**

நவலோக்க மருத்துவமனைக் குழுமம் 1985ஆம் ஆண்டில் அரச சுகாதாரத்துறையில் நுழைந்தது. இலங்கையில் முதல் தனியார் மருத்துவமனையாக மூன்றாம் நிலை சேவைகளை வழங்கியது. அப்போதிருந்து, கலாநிதி ஜயந்த தர்மதாசவின் தொலைநோக்குச் சிந்தனையின்கீழ், இந்த மருத்துவமனை குறிப்பிடத்தக்க உள்ளூர் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப்பெற்று, நாட்டின் மருத்துவ வளர்ச்சியில் முன்னோடியாக இருந்து வருகிறது. 2020ஆம் ஆண்டில், நவலோக்க மருத்துவமனைகள் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதாரப் பாதுகாப்புத் தரங்களுக்கு இணங்க மதிப்புமிக்க Joint Commission International's (JCI) தங்க முத்திரையைப் பெற்றுள்ளது.

நவலோக்க மருத்துவமனைகளில் 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு சேவைகள், அதிநவீன ETU வசதிகள், விமான மருத்துவ சேவைகள் உள்ளிட்ட நடமாடும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் வீட்டுக்கு சென்று மருத்துவ பராமரிப்பு வழங்கும் நர்சிங் பிரிவு ஆகியவை உள்ளன. சிறந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் உற்சாகமான மற்றும் தொழில்முறை சேவை குழுவின் தலைமையில், நவலோக்க மருத்துவமனைகள் ஆரோக்கியமான மற்றும் வலுவான இலங்கையை நவீன தொழில்நுட்பம் மற்றும் மலிவு விலையில் சுகாதாரத் தீர்வுகளுடன் கட்டியெழுப்பும் நோக்கில் முழுமையாக உறுதிபூண்டுள்ளது.

திகதி 04.01.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4637
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,721,480.00
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 6 5 4 1 0 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 18,538,400.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2932
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,334,260.00
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 04 16 23 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 63,803,815.20

Mega POWER
மெகா பவர்
கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 985
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,053,940.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 165,155,947.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: J
சுப்பர் இலக்கம்: 07
வெற்றி இலக்கங்கள்: 03 04 05 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 667
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,965,920.00
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 06 28 31 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 91,230,858.00

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 340
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,766,960.00
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 09 40 51 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 14,044,574.40

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1657
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,665,680.00
சுப்பர் இலக்கம்: 11
வெற்றி இலக்கங்கள்: 10 32 50 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,370,502.00

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# பஸ்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல்; இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு






*மு.தமிழ்ச்செல்வன்*

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலைக்கு சொந்தமான பஸ்கள் மீது நேற்று முன்தினம் (04) இரவும், நேற்று (05) அதிகாலையும் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, பருத்தித்துறை சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சேவையில் ஈடுபடமாட்டோம் என ஊழியர்கள் அறிவித்துள்ளனர். எனினும், ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதாக பொலிஸாரும், இ.போ.ச. நிர்வாகமும் உத்தரவாதமளித்து, பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் மீது தாக்குதலை மேற்கொண்டு, சாரதி மற்றும் நடத்துனர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நெல்லியடி சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இரவுவேளை குறித்த பஸ்ஸினை இடைமறித்த கும்பல் ஒன்று பஸ்ஸின் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், சாரதி மற்றும் நடத்துனர் மீதும் தாக்குதல் மேற்கொண்டது.

அதில் சாரதி மற்றும் நடத்துனர் காயங்களுக்குள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், ஏனைய நபர்களையும் கைதுசெய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, பருத்தித்துறை - திருகோணமலைக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் மீது, நெல்லியடி புறாப்பொறுக்கி சந்திப் பகுதியில் வைத்து இனந்தெரியாத கும்பல் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த தாக்குதல் சம்பவத்தில் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் சாரதியால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் பஸ் சாரதிகள் தெரிவிக்கையில், முச்சக்கரவண்டி சாரதிகளே தம்மை தாக்கியதாக சாரதியும், நடத்துனரும் தெரிவித்துள்ளனர். நேற்று அதிகாலை புல்மோட்டை செல்லும், பருத்தித்துறைசாலைக்கு சொந்தமான பஸ்ஸும் தாக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு வல்வெட்டித்துறை, மண்டான் ஊடாக பயணித்து நெல்லியடி நகருக்கு வந்து, கொடிகாமம் ஊடாக திருகோணமலை நோக்கிச் செல்வது இந்த பஸ்ஸின் பயணப்பாதை.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பஸ் வல்லை வெளியில் இனம்தெரியாதவர்களால் கல்வீசி தாக்கப்பட்டு, கண்ணாடிகள் உடைந்துள்ளன என்றனர்.

பஸ் தற்போது நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தியும், தாக்குதலாளிகளை கைதுசெய்ய கோரியும், இ.போ.சவுக்கு சொந்தமான நெல்லியடி பஸ் நிலையத்தில் தரித்து நிற்கும் முச்சக்கர வண்டிகளை அகற்றவும் வலியுறுத்தி பருத்தித்துறை சாலை தொழிலாளர்கள் நேற்று அதிகாலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் பருத்தித்துறை சாலை பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபட வில்லை. ஊழியர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதாகவும், தாக்குதலாளிகளை உடனடியாக கைதுசெய்வதாகவும் பொலிஸார், பருத்தித்துறைசாலைக்கு சென்று உத்தரவாதமளித்தனர். மீண்டும் சேவையை ஆரம்பிக்க இ.போ.ச. நிர்வாகமும் கேட்டுக் கொண்டுள்ளது.

எனினும், தாக்குதலாளிகளை கைதுசெய்யும் வரை மீண்டும் சேவையில் ஈடுபட மாட்டோம் என இ.போ.ச. ஊழியர்கள் தெரிவித்திருந்தபோதிலும் ஊழியர்களின் 3 கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக இ.போ.ச. நிர்வாகமும், பொலிஸாரும் வழங்கிய வாக்குறுதியையடுத்து இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறைசாலை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் காலை 7 மணி முதல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# மாடுகளுக்கு குறி சுடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை




## சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா நந்தகுமார் தெரிவிப்பு

*யாழ். நிருபர்*

பசுக்கள், காளைகளுக்கு நெருப்பிலிட்ட கம்பிகளினால் இனிவரும் காலங்களில் குறிசுடுவதில்லை என பட்டிப்பொங்கல் திருநாளில் சபதம் எடுப்போமெனவும் அதனை மீறி செயல்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா நந்தகுமார் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அன்புக்குரிய பசுக்களுக்கு, காளைகளுக்கு குறிசுடுதலால் ஏற்படும் சொல்லொண்ணா வேதனையை நாம் உணரவேண்டும். இனங்களுக்கு தொன்றுதொட்டு பொங்கலிட்டு தெய்வமாகப் போற்றிவரும் செய்நன்றி மறவாச் செந்தமிழராம் நாம், அறிந்தும் அறியாமலும் ஏதோ ஒரு விதத்தில் இக் கொடுமையான செயலை எமது தாயகத்தில் தொடர்ந்து வருவது வேதனைக்குரியது.

மரபு வழியாக பல விடயங்களில் தாய் தமிழக மக்களை பின்பற்றும் நாம் அவர்கள் என்றோ கைவிட்டுவிட்ட குறிசுடுதல் எனும் ஜீவகாருண்யமற்ற செயலை இன்று தொடக்கமாவது நாம் கைவிடுவதற்கு திடசங்கற்பம் பூணவேண்டும்.

எமது மேனியில் சிறு நெருப்புத்தணல் பட்டுவிட்டால் எமக்கு ஏற்படும் கொடூர வலியை எண்ணிப்பாருங்கள். இதே போன்றே நாம் பிள்ளைகள் போன்று நேசிக்கும் எமது பசுக்கள், காளைகள், நாம்பன்களுக்கு நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் குறியிடும்போது அவை துடிதுடித்து துன்பப்படும் வேதனையை எம் கண்ணில் ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நடைமுறைக்குப் பதிலாக வலியற்ற ரீதியில் காதில் இலக்கத்தகடு இடும் முறைமை எமது நாட்டில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதுவே கால்நடைகளை பதிவதற்கும் அடையாளப்படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும்.

அதற்கு அருகிலுள்ள அவரவர் பிரதேசத்துக்கு பொறுப்பான கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையை தொடர்பு கொண்டு செய்யமுடியும். அதனை விடுத்து, பழுக்கக் காய்ச்சிய கம்பியால் குறிசுடுதல், கொடூரமான முறையில் மலடாக்கம் செய்தல் (நலமடித்தல்) என்பவை இலங்கை அரசின் மிருகவதை தடைச்சட்டத்தின்கீழ் பாரதூரமான தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதுடன், இந்த செயல்களை கைவிட மறுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இந்நிலையில், கடந்த மாதம் குறிசுட்டு பசுவை இரத்த காயத்துக்குள்ளாக்கிய நிலையில், ஒருவருக்கு எதிராக சைவ மகாசபையால் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவரை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்ததுடன் வழக்கு தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் சைவ மகா சபையின் தலைவர் சண்முகரட்ணம், சட்டத்தரணி சிவஸ்கந்தஸ்ரீ ஆகியோர் பங்கேற்றனர்.

# மீசாலையில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது



*சாவகச்சேரி நிருபர்*

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை - ஐயா கடைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (04) பிற்பகல் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

சமாதான நீதவானான 80வயதான இராசரத்தினம் என்பவரது வீட்டுக்கு வெளியே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட சமையலறையில் வைக்கப்பட்டிருந்த எரிவாயு அடுப்பே இவ்வாறு வெடித்துச் சிதறியுள்ளது.

இதன்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும், இரவுவரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# முல்லை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை; ஆசிரியருக்கு விளக்கமறியல் நீடிப்பு

முல்லைத்தீவில் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில், முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆசிரியரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வடமராட்சியை சேர்ந்த 26 வயதான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு நகரிலுள்ள கிறிஸ்தவ மகளிர் பாடசாலையொன்றின் ஆசிரியர், கடந்த டிசம்பர் 24ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்துக்குள் இரண்டு மாணவிகளுடன் நெருக்கமாக எடுக்கப்பட்ட செல்பி படங்கள், மாணவிகள் சிலருடன் இணைய அரட்டை அடித்த ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் அவர் கைதாகியிருந்தார்.

முல்லைத்தீவு வலயக்கல்வி பணிமனைக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, விசாரணை மேற்கொள்ளப்பட்ட, மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஆசிரியர் கற்பித்தல் செயற்பாட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

குறித்த விவகாரம் தொடர்பில் சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், முல்லைத்தீவு பொலிஸாரால் குறித்த ஆசிரியர் டிசம்பர் 24ஆம் திகதி கைதாகினார்.

விசாரணைகளின் பின்னர் மறுநாள் 25ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது, ஜனவரி 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். குறித்த வழக்கு, முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (04) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேக நபரான ஆசிரியரின் விளக்கமறியல், எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு உத்தரவிட்டார்.

# வீட்டுப் பொருட்களுடன் கிராம அலுவலர் அலுவலகத்துக்குள் வந்து தங்கிய பெண்

*வவுனியா செய்தியாளர்*

வவுனியாவில் குடியிருப்பதற்கு வீடு இல்லை எனத் தெரிவித்து வவுனியா தோணிக்கல் கிராம அலுவலர் அலுவலகத்தில் வீட்டுப் பொருட்களுடன் வந்து பெண்ணொருவர் தங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் (04) மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தோணிக்கல், ஆலடிப் பகுதியில் பிறிதொரு நபரின் வீட்டில் வசித்து வந்த பெண் ஒருவரை வீட்டு திருத்தவேலை காரணமாக குறித்த வீட்டு உரிமையாளர் வெளியேற்றியுள்ளார்.

இதனையடுத்து வாகனம் ஒன்றில் தனது வீட்டிலிருந்த பொருட்களை ஏற்றிய குறித்த பெண் வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் அலுவலகத்தில் உள்ள அறை ஒன்றில் தனது



பொருட்களை இறக்கி வைத்துவிட்டு அங்கு தங்கியுள்ளார். குறித்த விடயம் தொடர்பில் அறிந்துகொண்ட பதில் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் குறித்த பெண்ணிடம் தகவல்களை பெற்று அவரின் நிலை தொடர்பில் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸார் ஆகியோருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் உத்தியோகத்தர்கள் குறித்த பெண்ணின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், பொலிஸாரிடமும் தெரியப்படுத்தியிருந்தனர். குறித்த பெண் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிய வந்ததையடுத்து, மருத்துவ ஆலோசனையும் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார், மகளிர் பொலிஸாரின் உதவியுடன் குறித்த பெண்ணை இரவு 10 மணியளவில் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச்சென்று வாக்குமூலம் பெற்றபின் வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அவருடைய பொருட்கள் கிராம அலுவலர் அலுவலகத்தில் உள்ள அறை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. சிகிச்சையின் பின்னர் குறித்த பெண் தங்குவதற்கான இடம் ஒன்றினை வழங்குவதற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள்






யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் காற்றினால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு மெசிடோ நிறுவனத்தினால் நேற்று (05) நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட 2ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கும் மெசிடோ நிறுவனத்தின் நிவாரணப்பணி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், யாழ்ப்பாணம் - நாவாந்துறை சென்நீக்கிலஸ் மகளிர் மன்றத்தில் வைத்து 160 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சுசில் பதவி நீக்கம் குறித்து மக்கள் பிரதிநிதிகள் சொல்வதென்ன ?



## “இன்று அதிகாரத்தில் உள்ளவர்கள் அன்று வாக்களிக்கக்கூட நாட்டில் இருக்கவில்லை”

**ஜனாதிபதியை மறைமுகமாகச் சாடுகிறார் சுசில் பிரேமஜயந்த**

“எதிர்காலத்தில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க மக்களுடன் கைகோர்த்துச் செயற்படவுள்ளேன். அதற்காக அர்ப்பணிப்புடன் இயங்குவேன். மஹிந்த ராஜபக்ஷவை நாமே ஜனாதிபதியாக்கினோம். இன்று அதிகாரத்தில் உள்ளவர்கள் அன்று வாக்களிப்பதற்குக் கூட நாட்டில் இருக்கவில்லை” - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சுப் பொறுப்பிலிருந்து பதவி நீக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“புதுவருட தினத்தை விட அதிகமான வாழ்த்துகள் எனக்குக் கிடைத்தவண்ணம் உள்ளன. நாட்டின் நிலைமை குறித்து நான் உண்மையைச் சொன்னேன். நிரம்பல் இல்லாத சந்தர்ப்பத்தில் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும்போது விலை உயர்வடைவது பொருளாதார ரீதியாக இயல்பாகவே இடம்பெறுவதாகும். இதனை சம்பந்தப்பட்டவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இந்த விடயத்தில் விவசாய அமைச்சரின் இயலாமையை நான் சுட்டிக்காட்டினேன்.

இன்று நாட்டில் உள்ள இளைஞர்கள் தமது எதிர்காலம் குறித்த கேள்விக்குறியுடன் இருக்கிறார்கள். பெரும்பாலானோர் நாட்டை விட்டுச் செல்கிறார்கள். இதற்கு ஆட்சியாளர்கள் பொறுப்புக் கூற வேண்டுமல்லவா? ஒவ்வொரு நாளும் இனத்தையும் மதத்தையும் வைத்துக்கொண்டு தேர்தலை வெற்றிக்கொள்ளும் சூழ்நிலை உருவாகுவதில்லை” என அவர் மேலும் தெரிவித்தார்.



## அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு முன் சுசிலுடன் பேசியிருக்க வேண்டும்

**- அமைச்சர் வாசுதேவ**

“சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்ட விடயத்தில், ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு முன்னர் அவருடன் பேசியிருக்க வேண்டும். சுசில் இறுதியாக தெரிவித்த கருத்துதான் அவரை நீக்குவதற்குக் காரணம் என்றால் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

அவர் விமர்சனம் செய்யவில்லை, மாற்றுக் கருத்தை முன்வைத்திருக்கிறார். அந்த உரிமை எங்கள் எல்லோருக்கும் உண்டு. இந்த அரசாங்கத்தில் இருந்துகொண்டு மாற்றுக் கருத்தை நாமே முதலில் முன்வைத்தோம். எமது பதவியை துறக்குமாறு எங்களிடம் நேரடியாகக் கூறினால் நாம் அதனை ஏற்றுக்கொள்வோம்”.

## எங்களுடன் இருப்பவர்களை நீக்கக் கூடாது

**- அமைச்சர் விமல் வீரவங்ச**

“நாட்டின் தற்போதைய நிலைமையில் எதிர்க்கட்சியில் இருக்கும் உறுப்பினர்களைக் கூடஇணைத்துக்கொண்டு ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் தேவையுள்ள நேரத்தில், எங்களுடன் இருப்பவர்களை நீக்கக்கூடாது.

வெளியில் இருப்போரை இணைத்துக்கொண்டு, நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்வதே சிறந்த செயற்பாடாகும். இந்த நிலைமையில் ஒரு சில அமைச்சர்களின் தனிப்பட்ட கருத்துகளை எமது தோல்வியாக எடுத்துக்கொள்ளாமல், அவற்றை முழுமையாக நோக்க வேண்டும். அப்போதுதான் விமர்சனம் செய்தவர்கள் கூட தங்களைத் திருத்திக்கொள்ள முடியும்”

## பயந்து நடுங்குகிறார் கோட்டாபய

**- அநுரகுமார திசாநாயக்க எம்.பி.**



“ஜனாதிபதி, விமர்சனங்களுக்கு அஞ்சி, விமர்சிப்போரை பதவி நீக்கம் செய்துவருகிறார். சுசில் பிரேமஜயந்த நாட்டு நிலைமை பற்றி கூறியபோது பயந்து நடுங்கி அவரை நீக்கியுள்ளார். அதேபோல விவசாய அமைச்சின் செயலாளர் உண்மையைக் கூறியபோது அவரையும் நீக்கினார்.

இது அதிகாரவர்க்க குணாதிசயம் அல்ல. பயத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களேயாகும். பயத்தின் விளைவுகள் இவை. பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் அதிகாரம் படைத்தவர்களால் எந்த வகையிலாவது பாதுகாக்கப்படுகிறார்கள். தமக்கு சிறுவகையிலேனும் அச்சுறுத்தலாக அமைபவர்கள் பதவி நீக்கப்படுகிறார்கள்.

நாடு பல்வேறு வகையில் நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டுள்ளது. நாம் கடந்துவந்த பாதையை மாற்ற வேண்டிய தேவை உருவாகியுள்ளது”.

## சுசில் வீரராகிவிட்டார்

**- சந்திம வீரக்கொடி எம்.பி.**

“சுசில் பிரேமஜயந்த தெல்கந்த சந்தையில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார். ஜனாதிபதி அவரை பதவி நீக்கியதன் ஊடாக சுசில் வீரராகிவிட்டார்.

அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறிய அமைச்சர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதியான வகையில் எந்த செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அகப்பைகளில் விடயங்கள் பரிமாறப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில் நாங்கள் 16 பேர் மொட்டு கட்சியில் இணைந்துகொண்டோம். எங்களுக்கு உரிய வசதிகள் கூட கிடைக்கப்பெறவில்லை”



## ஆரம்பத்திலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும்

**- அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ**

“ஜனாதிபதி சரியான தீர்மானத்தையே எடுத்திருக்கிறார். இந்தத் தீர்மானத்தை ஆரம்பத்திலேயே எடுத்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் கூட்டுப்பொறுப்பு தொடர்பில் அறிவில்லையெனில், அதிலிருந்து விலகுவதே சிறந்தது. சுசில் பிரேமஜயந்த, அரசாங்கத்தையும் அதன் வேலைத்திட்டங்களையும் மாத்திரமல்லாது, அரசின் கொள்கைகளையும் விமர்சித்து வந்துள்ளார். அமைச்சர்கள், அரசாங்கத்தின் கொள்கைகளை பாதுகாப்பவர்களாக இருக்க வேண்டும்.

அந்தக் கொள்கைகளில் ஏதேனும் தவறுகள் இருக்கும் பட்சத்தில் அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு பொருத்தமான இடம் உண்டு. ஓர் அணியில் விளையாடுவதென்றால், அந்த அணிக்குள் உள்ள பிரச்சினைகளை அணியுடனேயே கலந்துரையாட வேண்டும். அதைவிடுத்து வெளியில் பேசிப் பயனில்லை.

சிரேஷ்ட அமைச்சர்கள் என்ற வகையில் அவர்கள் ஏனையோருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். உள்ளே பேசுவதற்கு முதுகெலும்பு இருக்க வேண்டும்.

அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு எதிர்க்கட்சியினரின் வேலையை செய்ய முடியாது”.



## மன வருத்தத்துக்குரியது

**- அமைச்சர் டலஸ் அழகப்பெரும**



“இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை ஜனாதிபதி பதவி நீக்கியதாக அறிந்தவுடன் மனவருத்தமடைந்தேன். ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இது கட்சிக் கூட்டத்திலோ அமைச்சரவையிலோ எடுக்கப்பட்ட தீர்மானமல்ல”.

## நாட்டின் பிரச்சினைகளை அமைச்சர்கள் வெளியில் கதைக்கக் கூடாது

**அமைச்சர் காமினி லொக்குகே**

“நாட்டில் பிரச்சினைகள் இருக்குமாயின், அது தொடர்பில் அமைச்சரவையில் அல்லது உயர்பீடத்துடன் பேச வேண்டும். அதனை விடுத்து, விகாரைகளில் இடம்பெறும் தான நிகழ்வுகளில் அவற்றைப் பேசிப் பயனில்லை.

அமைச்சர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவையிலோ அல்லது கட்சிக் கூட்டத்திலோ கலந்துரையாட முடியும். அரசாங்கம் ஒன்றை கொண்டு நடத்துவதானால் அதனைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும். நாட்டின் பிரச்சினைகளை அமைச்சர்கள் வெளியில் கதைக்கக் கூடாது”.

## ஜனநாயக கொள்கை இல்லாதவர் ஜனாதிபதி

**- அஷோக் அபேசிங்க எம்.பி.**



“ஒரே நாடு ஒரே சட்டம்” என்பது அமைச்சரவையிலேயே கேள்விக்குறியாகியுள்ளது. ஒருசில அமைச்சர்கள் ஒரு விதத்திலும் வேறு சிலர் மற்றுமொரு விதத்திலும் நடத்தப்படுகிறார்கள்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மூவர் அமைச்சரவைத் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியிருக்கிறார்கள். அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை அவர்கள் மீறியிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆனால், சந்தைக்குச் சென்று பொருட்களின் விலை அதிகரிப்பு குறித்த மக்களின் பிரச்சினையை எடுத்துக்கூறிய அமைச்சர் பதவி நீக்கப்பட்டிருக்கிறார்”.

## தலைவலிக்கு தலையணையை மாற்றிப் பயனில்லை

**- வஜிர அபேவர்தன**

“அமைச்சர்களை, அமைச்சின் அதிகாரிகளை நீக்குவதன் ஊடாக நாட்டை முன்னேற்றிவிட முடியாது. அரசாங்கத்தின் உள்ளக, வெளியக கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சர்களை மாற்றுவதானது தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போலாகும். அதில் பயனில்லை.

நாட்டை முன்னேற்றுவதற்கு சிறந்த அரசியல் தலைமைத்துவம் அவசியமாகும். அரசாங்கத்தின் இயலாமைக்கான பொறுப்பை அமைச்சர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் சுமத்திவிட முடியாது. யாரை மாற்றினாலும் இந்த அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியாது”.



## ராஜபக்ஷக்கள் மாத்திரமே எஞ்சுவார்கள்

**- வசந்த சமரசிங்க**

“விமர்சனம் செய்வோரை வெளியேற்றும் செயற்பாடுகளையே அரசாங்கம் முன்னெடுத்துவருகிறது. அந்த வரிசையில் சுசில் பிரேமஜயந்தவும் இடம்பெற்றுள்ளார். இது அரசாங்கமல்ல, ஒரு கம்பனி. விமர்சிப்போரை கம்பனிகளே வெளியேற்றும். அரசாங்கமும் அவ்வாறுதான் செயற்படுகிறது. அமைச்சின் செயலாளர்கள், பிரதான அதிகாரிகளை வெளியேற்றுகிறது. அவ்வாறெனின், இறுதியில் ராஜபக்ஷக்கள் மாத்திரமே எஞ்சுவார்கள்.

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை மீறி தான்தோற்றித்தனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தை விமர்சிப்போரை வெளியேற்றாமல் விமர்சனத்துக்கான காரணம் குறித்து சிந்திக்க வேண்டும். அரசியல் தேவைக்காக மாத்திரம் அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் நாட்டு மக்கள் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்”.



## மக்களுக்காக குரல் கொடுப்பவர்களுக்கு அரசாங்கத்தில் இடமில்லை

**- விஜயதாச ராஜபக்ஷ எம்.பி.**

“நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் குரல் கொடுப்பவர்களுக்கு அரசாங்கத்தில் இடமில்லை. சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்கியதன் ஊடாக அது உறுதியாகியுள்ளது.

மணிமாலையில் அனைத்து மணிகளும் ஒரே நேரத்தில் கழன்று விழுவதில்லை. மாலை ஒன்றில் 100 மணிகள் இருக்குமாக இருந்தால், அது பலமிழக்கும்போது ஒவ்வொரு மணியாகவே கழன்று விழும். ஒன்று விழுந்துவிட்டால் மற்றைய மணிகளும் சிதறிவிடும்.

அதேபோன்றதொரு நிலைமைதான் இன்று ஏற்பட்டுள்ளது”.

# புதுக்குடியிருப்பில் பாரிய வெடிகுண்டை இரும்புக்காக கடத்திய அறுவர் கைது

(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட, மக்களுக்கு சொந்தமான காணியில் கைவிடப்பட்ட பாரிய இரண்டு வெடிகுண்டுகளை இரும்புக்காக கடத்தி செல்ல முற்பட்ட ஆறு பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட இரண்டு பாரிய வெடிகுண்டு இருப்பதை அங்கு வேலி அமைப்பதற்காக சென்ற நபர் இனம் காட்டியதை தொடர்ந்து, அதனை விற்பதற்காக எடுத்துச்செல்லமுற்பட்டபோது புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியினை



சேர்ந்த 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் (04) கைதுசெய்துள்ளனர்.

ஒவ்வொன்றும் சுமார் 400 கிலோ கிராம் எடைகொண்டதாக இருந்த குறித்த குண்டுகள் இரும்பிற்காக கடத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் கைவேலி புதுக்குடியிருப்பினை சேர்ந்தவர்கள். இவர்களை நேற்று மாங்குளம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ள காணி, யுத்தம் முடிந்த காலப்பகுதியிலிருந்து 12 வருடங்களுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதோடு, அண்மையில் காணி உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்காக மாவட்ட செயலகத்திடம் இராணுவத்தரப்பால் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதையற்ற தேசத்துக்கான சுதந்திரப் போராட்ட முன்னோடி விருது ஊடகவியலாளர் றிப்தி அலிக்கு

ஊடகவியலாளர் றிப்தி அலிக்கு, 'போதையற்ற தேசத்துக்கான சுதந்திரப் போராட்ட முன்னோடி' எனும் விருது புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

புகையிலை, புகைபிடித்தல் மற்றும் மதுசாரம் தொடர்பில் அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையத்தள ஊடகங்கள் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உழைத்து வரும் ஊடகவியலாளர்கள், அதிகார சபையினால் வருடாந்தம் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்கள்.

இதற்கமைய, 2021ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது, விடியல் இணையத்தளத்தின் ஆசிரியர் றிப்தி அலிக்கு தமிழ் மொழிக்கான விருது சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவினால் வழங்கப்பட்டது.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர்



கலாநிதி சமாதி ராஜபக்ஷ உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை - ஓமான் ஹொக்கிப் போட்டியில் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய பங்கேற்பு

## இராஜதந்திர உறவுகளின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு








இலங்கைக்கும் ஓமான் சுல்தானேற்றுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 40ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஓமான் ஹொக்கி சங்கத்தின் ஒத்துழைப்புடன் மஸ்கட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் நடத்தப்பட்ட முதலாவது இலங்கை - ஓமான் கிளப் அளவிலான ஹொக்கிப் போட்டியின் பரிசளிப்பு விழாவில், இலங்கையின் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார். ஓமான் சுல்தானேற்றின் கலாசாரம், விளையாட்டு மற்றும் இளைஞர்கள் அமைச்சின் துணைச் செயலாளர் பசில் அஹமட் அல்- ரவாஸ் ஓமான் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவ்விழாவில் கலந்து கொண்டார்.

2021 டிசம்பர் 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் மஸ்கட்டில் உள்ள பௌஷரில் உள்ள சுல்தான் கபூஸ் விளையாட்டு வளாகத்தின் ஹொக்கி மைதானத்தில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியை ஓமான் ஹொக்கி சங்கத்துடன் இணைந்து ஓமானின் கலாசாரம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடத்தியது. ஓமான் ஹொக்கி சங்கத்தின் தலைவர் கலாநிதி மர்வான் அல்- ஜுமா, இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் தலைவர் கமல் புஷ்பகுமார, ஓமான் - இலங்கை ஹொக்கி குழுவின் தலைவர் திவங்க விஜேரத்ன, ஓமான் ஹொக்கி சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் இரு நாடுகளினதும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுகளின் அதிகாரிகளின் முன்னிலையில் ஓமான் சுல்தானேற்றுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வாத் 2021 டிசம்பர் 28ஆம் திகதி போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இரு நாட்கள் இடம்பெற்ற போட்டியில் டிஃபென்ஸ் வோரியர்ஸ் ஹொக்கி கிளப் மற்றும் கொழும்பு ஹொக்கி அண்ட் ஃபுட்போல் கிளப் ஒஃப் ஸ்ரீலங்கா ஆகிய அணிகள் ஓமானின் அஹ்லி சிதாப் கிளப் மற்றும் சோஹர் கிளப் ஆகிய அணிகளுடன் மோதின. இலங்கையின் டிஃபென்ஸ் வோரியர்ஸ் ஹொக்கி கிளப் 40ஆவது ஆண்டு சம்பியன்ஷிப் கோப்பையை வென்றது.

ஓமான் நடத்திய டி20 கிரிக்கெட் உலகக் கோப்பை - 2021 தகுதிச் சுற்றுப் போட்டிகளின் தொடக்க விழாவில் கலந்துகொள்வதற்காக 2021 ஒக்டோபரில் விஜயம் செய்திருந்த இலங்கையின் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் இலங்கை மற்றும் ஓமானுக்கு இடையேயான முதலாவது கிளப் அளவிலான ஹொக்கிப் போட்டி முன்மொழியப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் பாலசூரிய இந்த விஜயத்தின்போது ஓமான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் மற்றும் ஓமானிய தனியார்துறை உயரதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டதுடன், இலங்கைக்கும் ஓமான் சுல்தானேற்றுக்கும் இடையிலான பொருளாதார இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பரஸ்பரம் ஆர்வமுள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.


# ஆனமடுவ பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - ஆனமடுவ பிரதேச சபையின் புதிய செயலாளராக, புத்தளம் நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தரான சுஜித் ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனமடுவ பிரதேச சபையில் ஏற்பட்டுள்ள செயலாளர் வெற்றிடத்துக்கே இவர் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் நகர சபையில் செயலாளர் வெற்றிடம் காணப்பட்டபோது ஆறு மாதங்களுக்கு மேல், தற்காலிக செயலாளராக கடமையாற்றி வந்த சுஜித் ஜயசுந்தர, நகர சபைக்கு நிரந்த செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் (04) வரை நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி வந்தார். இவ்வாறு நாளை புதிய செயலாளராக கடமைப் பொறுப்பேற்கவுள்ள



சுஜித் ஜயசுந்தரவுக்கு புத்தளம் நகர சபை ஊழியர்களால் நேற்று முன்தினம் பிரியாவிடை வைபவம் ஒன்று நகர சபையில் இடம்பெற்றது.

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செயலாளர் உட்பட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# கேரள கஞ்சாவுடன் அநுராதபுரத்தில் ஒருவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் விஜயபுர பகுதியில் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று மாலை விஜயபுர நாகசேன மாவத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் 350 கிராமிற்கும் அதிகமான கேரள கஞ்சாவினை அநுராதபுரம் பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் நெலுங்குளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 38 வயதுடையவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த சந்தேக நபர் நெலுங்குளம் மற்றும் ஞானிக்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்கு கேரள கஞ்சாவினை விநியோகிப்பவர் என்பது மேலதிக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# சவாட் கிக் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்துகொள்ள பாகிஸ்தானுக்கு செல்லும் பன்னிரு விளையாட்டு வீரர்கள்

## கம்பளையில் இடம்பெற்ற தரப்படுத்தல் நிகழ்வில் ஐ.ம.சக்தியின் முஸ்லிம் விவகாரச் செயலாளர் பஸ்லான் பாராட்டு












(இக்பால் அலி)

விளையாட்டுத்துறை அமைச்சின் 68 ஆவது தேசிய விளையாட்டான சவாட் கிக் குத்துச் சண்டை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து பாகிஸ்தானில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 13ஆம் திகதி 12 விளையாட்டு வீர வீராங்கனைகள் விஜயம் செய்யவுள்ளமை வரவேற்கத்தக்க அம்சமாகும் என்று கம்பளைத் தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் விவகாரச் செயலாளரும் சமூக செயற்பாட்டாளருமான சாமஸ்ரீ தேசகீர்த்தி பஸ்லான் பாருக் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட மற்றும் மாகாண விளையாட்டு கழகங்களின் ஏற்பாட்டில் விளையாட்டுத்துறை அமைச்சின்கீழ் உள்ள 68ஆவது தேசிய விளையாட்டான சவாட் கிக் குத்துச் சண்டை விளையாட்டு தரப்படுத்தல் செயலமர்வு கம்பளை தி.மு. தயாரட்ன கேட்போர் கூடத்தில் கண்டி மாவட்ட விளையாட்டுக் கழகத்தின் தலைவர் டி.எம். நௌசாட் தலைமையில் இடம்பெற்றது.

இரு நாள் நடைபெற்ற இந்த தரப்படுத்தல் தெரிவில், இறுதிநாளன்று பிரதம அதிதியாக கண்டி மாவட்ட சவாட் கிக் குத்துச் சண்டை கழகத்தின் போசகரும் கம்பளைத் தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முஸ்லிம் விவகாரச் செயலாளரும் பிரபல்யமான சமூக, அரசியல் செயற்பாட்டாளருமான சாமஸ்ரீ தேசகீர்த்தி பஸ்லான் பாருக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம அதிதி இவ்விளையாட்டுச் சம்மேளனத்தின் தேசிய தலைவர் பிரசாத் விக்கிரமசிங்க மற்றும் இவ்விளையாட்டின் பயிற்றுவிப்பாளர்களினால் தெரிவு செய்யப்பட்ட வீர வீராங்கனைகளுக்கு வர்ணப் பட்டிகளை அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இன்று இளம் வாலிபர்கள் விரக்தி மனப்பான்மையோடு வாழும் சூழலில் பாதுகாப்பு பெற வேண்டுமாயின் தன்நம்பிக்கையூட்டக் கூடிய விளையாட்டுக் கலைகளில் ஈடுபடச் செய்யவேண்டும். பாடசாலைக் கல்வியை வழங்குவதோடு மட்டுல்ல, பிரத்தியேகமான மன உறுதியினை வலுப்படுத்தக் கூடிய விளையாட்டுக் கலைகளில் பிள்ளைகளை பயிற்றுவிப்பது மிக அவசியமாகும்.

இன்று இளம் வாலிபர்கள் வெளியே பெரும் சவாலை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எமது பிள்ளைகள் வீட்டில் வாழும் சூழல் வெளியே இல்லை. வெளியே புதுப்புது பழக்கங்கள், புதுப்புது விசயங்கள் என அவர்கள் வேறொரு திசை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். இதனால் பிள்ளைகளை வெளியே அனுப்புவதற்கு பெற்றோர்கள் அச்சப்படுகின்ற ஒரு பயங்கரமான சூழல் தோன்றியுள்ளது.

இது உண்மையிலேயே ஒரு ஆபத்தான விடயமாகும். தற்போது வளரும் இளைஞர் சமூகம் தான் உண்டு. தான் உண்டு; தன் பாடுண்டு என்ற மனோ நிலையில், ஒரு தனிமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இப்படி ஒரு சமூகம் உருவாகும் என்றால் எமது எதிர்கால இளைஞர்கள்தான் தமது சமூகத்தின் தலைவர்கள் என்று சொல்லுகின்ற அர்த்தம் பொய்ப்பித்துவிடும். இப்படியான சூழலை யாரும் கண்மூடித்தனமாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இப்பிள்ளைகள் சமூகமயப்படுத்தப்பட வேண்டும். அதற்கு முதலாவது அவர்களுக்கு தன்நம்பிக்கை ஊட்டப்படுவது மிக அவசியமாகும்.

அன்று பரீட்சைகளில் தோல்வியுற்றவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். காதலில் தோல்வியுற்றவர்கள் தற்கொலை செய்துக் கொண்டார்கள் என இப்படி வாழ்க்கையில் பல துறைகளிலும் வெறுப்புற்றவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று நாம் கேள்வியுற்றிருப்போம். ஊடகங்களில் பார்த்திருப்போம்.

அது புதிய முறையில் வளர்ச்சியடைந்து தற்கொலை எந்தளவுக்கு உள்ளதென்றால் புலமைப் பரிசில் தோல்வியுற்ற சிறிய வயது பிள்ளைகள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். இது மிகவும் பரிதாபமான செயற்பாடாகும். சிறு வயதான 10 வயதுப் பிள்ளை தற்கொலை செய்து கொள்வது என்பது சகிக்க முடியாது.

இந்தப் பிள்ளைகள் தன்நம்பிக்கை இழந்து தன் வாழ்க்கை அழித்துக் கொள்ளும் சம்பவங்கள் இன்று அதிகம் இடம்பெற்று வருகின்றன. சில இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி தன்னைத் தானே அழித்துக் கொள்கின்றனர்.

இவ்வாறான இன்றைய காலக் கட்டத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயலும் என அவர்களுக்கு தன்நம்பிக்கை ஊட்டி அவர்களைப் பாதுக்க வேண்டும். அதற்காக இது போன்ற விளையாட்டுத் துறைகளின் மூலம் அவர்களை வழிநடத்த முடியும்.

மேலும், 15 பெண்பிள்ளைகள் இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர் எனும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

எதிர்காலத்தில் பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்துக்கும் தற்பாதுகாப்புக்கும் மன வலிமைக்கும் பொருத்தமான விளையாட்டுக் கலைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தச் செய்தல் பெற்றோரின் மிக முக்கியமான கடமையாகும்.

கல்வித்துறையில் கவனம் செலுத்துவதைப் போன்று விளையாட்டுத்துறையிலும் தம்பிள்ளைகள் ஆளுமைமிக்கவர்களாக கட்டி எழுப்பப்பட வேண்டும். பெற்றோர்களாகிய நீங்கள் கல்வியிலும் சரி விளையாட்டுத் துறையிலும் சரி வெற்றிபெற முடியும் என்பதை பிள்ளைகளுக்கான சிறந்த வழிகளைக் காட்டுங்கள். பிள்ளைகள் மத்தியில் மறைமுகமாக கிடப்பிலுள்ள திறமைகளை வெளிக்கொணர கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை கற்றுக்கொடுங்கள். இதற்கு பெற்றோர்களது பங்கு முக்கியமானது என்றார்.

# திருமலை இயற்கை துறைமுகத்தை அபிவிருத்திசெய்ய அரசு தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலையில் அமைந்துள்ள இயற்கை துறைமுகத்தை அபிவிருத்திசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை இயற்கை துறைமுகத்தினை பார்வையிடுவதற்காக வருகை தந்தபோது நேற்று முன்தினம் (04) ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

கொரோனா சூழலில் நாடு பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருந்தாலும் அரசாங்கம் இவ்வாறான நெருக்கடியான சூழலிலும் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் அந்த அடிப்படையிலேயே நாட்டின் ஜனாதிபதியின் வழிகாட்டலில் தற்பொழுது கப்பல் போக்குவரத்து துறைமுக அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் அரசாங்கம் கப்பல் மற்றும் துறைமுக போக்குவரத்து தொடர்பாக உள்ள இடங்களில் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

அந்த அடிப்படையில் உலகில் பிரசித்திபெற்ற துறைமுகங்களில் ஒன்றான திருகோணமலை இயற்கை துறைமுகம் காணப்படுகின்றது. இது ஒரு இயற்கைத் துறைமுகம். கடந்த




காலம் முதல் அபிவிருத்தி என்ற ஒன்றை காணாத ஓர் சூழல்தான் இருந்து வந்தது. தற்போது அரசாங்கம் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகளில் கூடுதலான கவனத்தை செலுத்தி வருகின்றது. அந்த அடிப்படையில் நான் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில், திருகோணமலை துறைமுகத்தினை அபிவிருத்திசெய்ய வேண்டிய தேவைப்பாடு இருப்பதனால் இந்தப் பகுதி மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் எங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அதனடிப்படையில், கப்பல் மற்றும் துறைமுக அமைச்சர் ரோஹித்த அபேவர்தனவின் ஆலோசனையின் கீழ் திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வரும்நோக்கில், இவ்வாறான வீதி அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்திகள் என பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முக்கிய கோரிக்கைகளாக வீதி அபிவிருத்தி மற்றும் கப்பல் போக்குவரத்து போன்ற போக்குவரத்து தொடர்பான அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக இந்த திருகோணமலை இயற்கை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் இதனால் நாட்டில் ஏற்படுகின்ற வேலையில்லாப் பிரச்சினைகளுக்கும் பாரிய தீர்வு எட்டப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், இந்திய பிரமுகர்களுடன் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை நிறைவுசெய்து திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கரிம உணவு மாதிரிகளை சோதிக்க புதிய ஆய்வகம்

(கிண்ணியா நிருபர்)

கரிம உணவு மாதிரிகளை பரிசோதிப்பதற்கான ISO தரச்சான்றிதழ் பெற்ற ஆய்வு கூடத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

கிழக்கு மாகாண சபை மற்றும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து இந்த ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கூடுதலாக, முன்மொழியப்பட்ட ஆய்வகத்திற்கான ISO தரநிலைகளை ஏற்றுக்கொள்வதற்கும் அதன் செயல்பாட்டுக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழங்குகிறது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாண முன்னாள் பொதுச் செயலாளர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ராதிகா சமரசேகர ஆகியோர் கைச்சாத்திட்டனர்.



நாட்டில் எங்கிருந்தும் கரிம உணவு மாதிரிகளை பரிசோதிப்பதற்காக திருகோணமலை கந்தளாய் பகுதியில் புதிய ஆய்வுக்கூடம் அமைக்கப்படவுள்ளது.

இன்ஸ்டிடியூட் ஒப் இன்டஸ்ட்ரியல் டெக்னாலஜியின் தலைவர் டாக்டர் ஜி.ஏ.எஸ். பிரேமகுமார உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மூதூரில் வெடித்தது எரிவாயு அடுப்பு

(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நவரத்னபுரத்தில் நேற்று (05) எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது.



குறித்த வீட்டின் உரிமையாளரான பெண் பகல் உணவு சமைத்துக் கொண்டிருந்தபோது எரிவாயுவில் ஏற்பட்ட கசிவினால் அடுப்பு வெடித்துள்ளது. எனினும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

இரண்டு மாதத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு எனவும் ஒரு வாரம் பாவிக்கும்போது ஏற்பட்ட கசிவே இவ்வெடிப்புச் சம்பவத்திற்கு காரணமெனவும் வீட்டு உரிமையாளர் குறிப்பிட்டார்.

# இனவாதம் தலைதூக்கியுள்ளதாக குற்றம் சுமத்தி ஆட்சியைக் கைப்பற்றிய அரசு கவிழும் நிலையில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்





(ரவ்பீக் பாயிஸ்)

இனவாதம், மதவாதம் மற்றும் குரோதங்கள் நாட்டில் தலைதூக்கியுள்ளதாக குற்றம் சுமத்தி ஆட்சிபீடத்தை கைப்பற்றிய இந்த அரசாங்கம், தற்போது அவர்களுக்குள்ளே பல கூட்டங்களாக பிரிந்து ஆட்சி கவிழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று (05) ஆதரவாளர்களுடன் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,


இனவாதம், மதவாதம் மற்றும் இனங்களுக்கிடையே குரோதம், பழிக்குப் பழி என்பவற்றினை பிரசாரம் செய்து ஆட்சிபீடத்தில் அமர்ந்து அதன் பின்னர் முழு நாட்டு மக்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்தி வைராக்கியங்களை விதைத்து எதிரிகளை உருவாக்கி, ஒருவருக்குள் ஒருவர் முட்டி மோதிக்கொண்டு நாட்டுக்குள் பெரும் தீயை மூட்டி வைத்து இனவாதம், மதவாதம் தலைதூக்கி அரசாங்கத்துக்குள் என்ன நடந்தது என்று அவர்களுக்கே தெரியாமல் அவர்களுக்குள்ளேயே பல பிளவுகள் ஏற்பட்டு பல கூட்டங்களாக பிளவுபட்டுள்ளார்கள்.

இவ்வாறு ஆட்சிபீடத்தை கைப்பற்றுவதற்காக பிரசாரங்களை மேற்கொண்ட அதி புத்திசாலிகள் இன்றைய தினம் வெளிப்படையாக இந்த அரசாங்கத்துக்கு எதிராக பல பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டை பிளவுபடுத்தியவர்கள் இரண்டு ஆண்டுகள் மாத்திரமே நிறைவடைந்துள்ள நிலையில், இவ்வாறான செயற்பாடுகளில் முளைவிட்ட இந்த அரசாங்கம் பல பிரிவுகளாக பிரிந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான தலைவர்களை வீட்டுக்கு அனுப்பும் காலம் மிக தூரத்தில் இல்லை.

திருகோணமலை மாவட்டத்தின் கடந்தகால அபிவிருத்தித் திட்டங்களை எடுத்துக்கொண்டால் திருகோணமலை மாவட்டத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி ஒன்று அமையுமாக இருந்தால் அதன் தலைவர் என்ற வகையில், திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து பிரதேசங்களிலும் அனைத்து பிரதான நகரங்கள் மற்றும் உப நகரங்களில் உரிய அபிவிருத்தித் திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவோம் என இவ்விடத்தில் உங்களிடம் உறுதியளிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



**என்னடாப்பா எதிர்த்துக்கதச்சாலும் அமைச்சர் பதவியை சனாதிபதி தூக்கிறாராம்..! ஆனா.. நம்மட டக்ளஸ், வியாழேந்தி, புள்ளையான், அங்கசன கடைசிவரையும் தூக்கமாட்டாரு ஏன் தெரியுமா..? இவங்க சோறு தின்ன மட்டுந்தான் வாய் திறக்கிறாங்க...**

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதான 60 பேருக்கும் 19 வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணிவந்த 60 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று (05) உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேரை கைதுசெய்தனர்.

அதேவேளை சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைதுசெய்தனர். இரு வெவ்வேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதுடன், 2 பேருக்கு எதிராக கொழும்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், 2 பேரின் வழக்கு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதையடுத்து, 60 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த வெவ்வேறு இரு வழக்குகளை கொண்ட 60 பேரும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று (05) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைவாக, நீதிமன்றுக்கு இவர்களை அழைத்துவர முடியாததையடுத்து, அவர்களை காணொளி மூலமாக, எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் உத்தரவிட்டார்.

# திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு

## மக்கள் விடுதலை முன்னணி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்






(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினரால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று (05) மாலை திருகோணமலை பஸ் நிலையத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திரா தலைமையில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினை வெளிக்காட்டினார்கள்.

"நாட்டை விற்காதே, மக்களை வறுமைக் குழிக்குள் தள்ளாதே, எண்ணெய் வளத்தை பதுக்கும் அராஜகத்தை நிறுத்து" போன்ற பதாதைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

# சுற்றுப்புறச்சூழலை பாதுகாப்பதற்கு எதிர்கால சந்ததிகளை வளப்படுத்தல்

## சாய்ந்தமருதில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு

(நூருல் ஹுதா உமர்)

"சுற்றுப்புறச்சூழலை பாதுகாப்பதற்கு எதிர்கால சந்ததியான மாணவர்களை வளப்படுத்தல்" எனும் தொனிப்பொருளிலான பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வொன்று நேற்று முன்தினம் (04) சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட செயலக சிறுவர் மேம்பாட்டுப் பிரிவு மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டுப்பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மாவட்ட செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஷரீபா சாஜஹானின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே.குறைஸா, சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். சயீபுதீன் ஆசிரியர் யூ.கே.எம்.முபாரக், மாவட்ட சிறுவர் கழகத் தலைவர் ஏ.ஆர்.எம்.ஜப்ரான், கிராம உத்தியோகத்தர் எம்.எம்.பாத்திமா ஜெய்மி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.சுரைபா ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# கிண்ணியா படகு விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி

## சஜித் தலைமையில் வழங்கிவைப்பு

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு பாதை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன்தினம் (04) நிதியுதவி வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்நாட்களில் வடக்கு, கிழக்கில் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டம், "ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மூச்சு" நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சித் தொடரின்போதே அவர் இந் நிகழ்வில் கலந்துகொண்டார்.

அண்மையில் இடம்பெற்ற படகு விபத்தில்



எட்டு பேர் உயிரிழந்திருந்ததோடு மேலும் பலர் காயமடைந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், இதனை ஏற்பாடு செய்திருந்ததுடன் உரிய சம்பவம் இடம்பெற்ற படகுப் பாதை பகுதியினையும் இதன்போது பார்வையிட்டார்.

# தமிழர் பிரதேசங்களில் விகாரைகள் அமைக்கும் திட்டம்; சிங்களக் குடியேற்றம் அமைக்கும் முயற்சியென சந்தேகம்

## பூர்வீக நிலத்தை விட்டுத்தருமாறு மக்கள் கோரிக்கை





(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பிரதேசத்தில் தமிழ் பூர்வீக பிரதேசங்களில் விகாரைகள் அமைத்து சிங்கள குடியேற்றங்களை அமைப்பதற்கு திட்டம் தீட்டுவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

திருகோணமலை பெரியகுளம் பிரதேசத்தில் 40 வருடங்களுக்கு மேலாக பூர்வீகக் குடிகளாக இருக்கும் தமிழ்ப் பிரதேசத்தில் இவ்வாறு விகாரை ஒன்று அமைப்பதற்கு வேலைகள் முன்னெடுத்துச் செல்வதாகவும் சிங்கள மக்கள் இல்லாத ஒரு பிரதேசத்தில் இவ்வாறு விகாரை அமைப்பது பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அவ்வாறு இப்பிரதேசங்களில் விகாரை அமைக்கப்பட்டால் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறும் எனவும் தமக்கான பூர்வீக நிலத்தை விட்டு தருமாறு பெரியகுளம் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேலும், திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியில் பெரியகுளம் பிரதேசத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னதாக சில விஷமிகளால் மழை ஒன்றிலிருந்து புதையல் தோண்டப்பட்டதாகவும் அவ்வாறு புதையல் தோண்டப்பட்டதாகக் கூறப்படும் மலைத் தொடர் ஒன்று அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அடையாளமிடப்பட்டு பாதுகாப்புப் படையிடம் கையளிக்கப்பட்ட நிலையில், அவ்விடத்தில் விகாரை ஒன்றை அமைக்க வேண்டும் என பிக்கு ஒருவர் வேலைகளை முன்னெடுத்து செல்வதாகவும் அவ்வாறு இப்பிரதேசங்களில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டால் அதை அண்டியுள்ள தமிழ்ப்




பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறும் எனவும் இதனால் தமிழ்ப் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்படுவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் விகாரைக்கான பாதையினை அப்பிரதேசத்தில் பூர்வீகமாக வசித்துவரும் ஒருவரின் இருப்பிடத்தின் ஊடாக அமைக்கப்படவிருக்கின்ற நிலையில் அதனைப் பெறுவதற்கு பிக்கு ஒருவர் கட்டாயப்படுத்துவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

தாம் ஆண்டாண்டு காலம் வசித்து வந்த காணியின் ஒரு பக்கத்தின் ஊடாக இவ்வாறு பாதையினை கேட்டு கட்டாயப்படுத்துவது தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாக பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

மேலும், இவ்வாறு அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டிருக்கும் விகாரைக்கான பாதைக்கு முன்னரே சுமார் 6 அடி அகலமுள்ள நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அது போதாதென பிக்கு ஒருவரினால் தனிநபர் ஒருவரின் காணியின் ஒரு பகுதியினை தருமாறு கட்டாயப்படுத்துவதாகவும் அவ்வாறு கட்டாயப்படுத்தும் நிலப்பரப்பில் தமது அன்றாட ஜீவனோபாயத் தொழிலாக ஒரு சிறிய கடையை நடத்தி வருவதாகவும் அதனை அகற்றி விகாரை அமைப்பதற்கான பாதைக்கு வலியை தருமாறு வலியுறுத்துவதாகவும் இதன்போது குற்றம் சுமத்தினார்.

மேலும், தமிழ் மக்களின் பூர்வீக குடியிருப்புக்கு மத்தியிலும் பூர்வீக நிலப்பரப்புக்கு மத்தியிலும் இவ்வாறு விகாரை ஒன்றை அமைத்து தமது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான காணி உரிமையினை மீறுவதற்கு இவ்வாறான மதகுருமார்கள் திட்டம் தீட்டுவது வேதனையளிப்பதாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் எனும் தொனிப்பொருளின்கீழ் செயற்படும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இவ்விடயத்தில் கவனம் செலுத்தி எமது நில உரிமையினை பெற்றுத்தருமாறும் வேண்டுகோள் விடுப்பதுடன் தமது பூர்வீக நிலத்தை விட்டு வேறு இடங்களுக்கு செல்ல முடியாது எனவும் தமது சொந்த நிலத்தினை மீட்டுத் தருமாறும் பெரியகுளம் பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலை தலைமையக பொலிஸ் பிரிவில் போதையில் நடமாடியவர் விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவு பகுதியில் பொது இடத்தில் போதையில் நடமாடிய ஒருவரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் நேற்று (05) உத்தரவிட்டார்.

திருகோணமலை, சுமேதகம பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருகோணமலை நகரில் பொது மக்கள் நடமாடுகின்ற இடத்தில் மதுபோதையில் நின்றுகொண்டு தகாத வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்ட நபர் ஒருவரை பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய, கைதுசெய்த பொலிஸார், திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மட்டு. சந்திவெளியில் வாகன விபத்து

## சம்பவ இடத்தில் ஒருவர் பலி



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு - சந்திவெளி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி நேற்று முன்தினம் (04) மாலை 6.00 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து இடம்பெற்றவேளை அவ்வீதி வழியே சென்ற வாகனமொன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமராவில் விபத்து இடம்பெற்ற காட்சிகள் பதிவாகியுள்ளன.

குறுக்குப்பாதையிலிருந்து பிரதான வீதிக்கு நுழைந்த முச்சக்கரவண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் முச்சக்கரவண்டியினைச் செலுத்தியவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 68 வயதுடைய நாகப்பன் ராமையா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இச்சடலத்தினை திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸிர் பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். சந்திவெளி பொலிஸார் விபத்து சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மரணமடைந்தவர் பேக்கரி உரிமையாளராவார். இவர் முச்சக்கரவண்டியில் கடைத்தெருவிற்குச் சென்றவேளை விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியப் பிரதமருக்கு அனுப்ப தயாரிக்கும் ஆவணத்தில் மக்கள் காங்கிரஸ் கையெழுத்திடாது

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு அனுப்ப தயாரிக்கும் ஆவணங்களில் கிழக்கு மக்களுக்கு சந்தேகம் இருப்பதாகவும், அந்த ஆவணத்தில் முஸ்லிம்களுக்கு ஒழுங்கான தீர்வுத் திட்டம் இல்லாமல் இருப்பதாகவும் கூறி அந்த ஆவணத்தை பகிரங்கப்படுத்த வேண்டும் என கோரிக்கை முன்வைத்து அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் "கிழக்கு கேடயம்" ஊடக மாநாட்டை நேற்று முன்தினம் (04) மாலை கல்முனையில் நடத்தினர்.

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோது,

தமிழ்க் கட்சிகள் சில இணைந்து இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள கடிதம் ஏன் அனுப்பப்படுகின்றது? அந்த கடிதத்தில் உள்ள விடயங்கள் என்ன என்பது தொடர்பில் வடக்கு, கிழக்கில் உள்ள பொதுமக்கள் குழப்பத்தில் இருக்கிறார்கள். அதனை தெளிவுபடுத்தவேண்டியது இந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் உட்பட முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுக்கு பெரிய பங்குள்ளது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். ஒழித்து மறைத்து செய்யப்படும் இந்த ஆவணத்தில் கூட முஸ்லிம்களின் இருப்புக்கு ஆபத்தான விடயங்கள் உள்ளதாக நாங்கள் நம்புகிறோம். இந்த கடிதத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் மக்களின் பிரதிநிதிகளுக்கோ அல்லது சமூக தலைவர்களுக்கோ தெளிவுபடுத்தப்படவில்லை என்பது மிகப்பெரிய அச்சத்தை உண்டாக்கியுள்ளது.

இது தொடர்பில் பூரண விளக்கம் தராமல், ஆவணத்தில் கையெழுத்திட்டால் கிழக்கில் வாழும் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களை ஒன்றுதிரட்டி அவர்களுடன் இணைந்ததாக மக்கள் பிரதிநிதிகளையும் ஒன்றாக வரவழைத்து எந்த நாடுகளுக்கு எல்லாம் இந்த ஆவணம் செல்கிறதோ அந்த நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மக்கள் பேரணியை நடத்தி, இந்த ஒப்பந்தத்தை மக்கள் நிராகரிப்பதாக பகிரங்கமாக அறிவிக்கும் தேவை வந்துவிடும் என்பதை இதில் சம்பந்தப்பட்டுள்ள தலைமைகளுக்கு தெரிவித்துக் கொள்கிறோம் என அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவரும், மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் இந்த ஊடக மாநாட்டில் கருத்து தெரிவித்தார்.

இங்கு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம்.அப்துல் மனாப், வடகிழக்கை இணைக்க வலியுறுத்தும் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தக்கோரும் கடித விவகாரம் வந்துள்ளது. மு.கா. உதயமாக காரணமாக இருந்த ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த மு.கா. தலைவர் ஹக்கீம் ஆதரவளிப்பதாக



நாங்கள் அறிகிறோம். நாங்கள் இதனை முன்னின்று செய்பவர்களிடம் கோருவது ஒன்றைத்தான். அதுதான் எங்களுக்கு இது தொடர்பில் தெளிவூட்டுங்கள் என்பது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் இந்த ஆவணத்தை ஆதரித்து மக்கள் காங்கிரஸ் கையெழுத்திடுவதில்லை என்று தீர்மானித்துள்ளோம். மக்கள் காங்கிரஸின் முடிவுகள் ஜனநாயக ரீதியாக உயர்பீட கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை ஒட்டியதாகவே இருக்கும். அதனடிப்படையில் தலைவரின் முடிவும் அதுதான் என்றார்.

இங்கு கலந்துகொண்டு கருத்துவெளியிட்ட காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சாணக்கியமிக்க தலைவராக அவரது ஆதரவாளர்களினால் நோக்கப்படுபவர். அவரது முடிவுகள் சமூகத்துக்கு ஆபத்தாக அமையாது என்ற நம்பிக்கையில் மக்கள் இருக்கிறார்கள். இந்த விடயம் தொடர்பில் தன்னிச்சையான முடிவுகளை எடுக்காமல் உயர்பீடத்தை கூட்டி முடிவெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# கல்முனை கிட்டங்கி பாலத்தில் வெள்ள நீர் பெருக்கெடுப்பு

## பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் கரையோர தாழ்நிலப் பிரதேசங்களும் நீரில் மூழ்கிவருகின்றன.

கல்முனை - நாவிதன்வெளியை இணைக்கும் பிரதான கிட்டங்கி பாலத்தில் நேற்று (05) வெள்ளநீர் பெருக்கெடுத்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் குறித்த பாலத்தின் வழியான பிரதான போக்குவரத்து முற்றாக தடைப்படலாம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய முகாம், சவளக்கடை, கொலணி, அன்னமலை மற்றும் சொறிக்கல்முனை போன்ற பிரதேச பொதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை நாவிதன்வெளி பிரதேச செயலகம், பிரதேசசபை, சுகாதார வைத்திய அலுவலகம் உட்பட அரச அலுவலகங்களில் பணியாற்றுவோர் மற்றும் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச சேவையாளர்களும் குறித்த பாலம் ஊடாகப் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்தின் நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை, காரைதீவு, நிந்தவூர் போன்ற தாழ்நிலப் பகுதிகள், வயல் நிலங்களும் வெள்ள நீரில் மூழ்கி வருகின்றன.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் முதன் முறையாக அன்னப்பிளவு சத்திரசிகிச்சை

## வெற்றிகரமாக முன்னெடுப்பு





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

வரலாற்றில் முதன்முறையாக அன்னப் பிளவினை (Cleft Palate Surgery) சீர்செய்யும் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் (04) நடத்தி முடிக்கப்பட்டது.

வாய் முகத் தாடை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் விராஜ் ஜயசிங்க மற்றும் மயக்க மருந்து நிபுணர் டாக்டர் எம்.என்.என்.எம்.சஹீர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சத்திரசிகிச்சை கூட வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களின் உதவியுடன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி வைத்திய நிபுணர்களுக்கும் சத்திரசிகிச்சை கூட குழுவினர்களுக்கும் நன்றி கூறுவதுடன், மேற்படி வைத்திய நிபுணர்களின் சேவையைப் பெற்று நன்மையடையுமாறு கிழக்கு கரையோர பிராந்திய மக்களை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனீபா கேட்டுக்கொண்டார்.

கொழும்பு மற்றும் கண்டி நகரங்களில் காலம் தாழ்த்தி செய்யப்பட்ட இவ் சத்திர சிகிச்சை, இன்று எமது பிரதேசத்தில் அன்னப் பிளவு குறைபாட்டினால் அவதியுரும் குழந்தைகளுக்கும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவேந்தல்

## மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு



(கனகராசா சரவணன்)

படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் 22ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு கட்சிக் காரியாலயத்தில் நேற்று (05) இடம்பெற்றது.

மட்டக்களப்பு அரசடி பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள கட்சியின் மாவட்ட காரியாலயத்தில் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தலில் கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு அன்னாரது திருஉருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி 2 நிமிட அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2000ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் காரில் சென்று கொண்டிருந்தபோது இனம் தெரியாதவர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் 13வயது சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் (04) உத்தரவிட்டார்.

மூதூர், தோப்பூர், பங்களா பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய திருமணமான ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் திருமணம் முடித்த, இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் அயல் வீட்டில் வசித்து வந்த 13 வயதுடைய சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக தெரிவித்து சிறுமியின் பெற்றோரினால் மூதூர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் தொடர்ச்சியான அடை மழையால் நிரம்பி வழியும் குளங்கள் - வான்கதவுகளும் திறப்பு

## வீதிகளில் வெள்ளம் - முதலைகள் ஊடுருவும் அச்சம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவந்த மழை நேற்று (05) காலையிலிருந்து சற்று குறைவடைந்துள்ளது. எனினும், மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சிறிய குளங்கள் அனைத்தும் நிரம்பி வழிவதையும் பெரிய குளங்கள் நிரம்பியுள்ள நிலையில், அவற்றின் வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளதையும் சில வீதிகளை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் மாவட்டத்தின் வெல்லாவெளி, கோவில்போரதீவு, பழுகாமம், பொறுகாமம், பெரியபோரதீவு, கொக்கட்டிச்சோலை, எருவில், களுவாஞ்சிக்குடி, குருமண்வெளி, களுதாவளை, தேத்தாத்தீவு உள்ளிட்ட பல இடங்களிலுள்ள சிறிய குளங்கள் நிரம்பி வழிவதை அவதானிக்க முடிகின்றது.

குளங்கள் நிரம்பி வழிந்து நேரடியாக மட்டக்களப்பு வாவியைச் சென்றடைவதனால் வாவியிலிருந்து முதலைகளும் குளங்களை நோக்கி வருகின்றன. இவ்வாறு வரும் முதலைகள் கிராமங்களுக்குள் உட்புகும் சாத்தியங்கள் அதிகம் காணப்படுவதாக கிராம மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 30அடி ஒரு அங்குலமாகவும், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 15அடி 6அங்குலமாகவும், வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 18 ஆகவும், கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11அடி 9அங்குலமாகவும் உயர்ந்துள்ளதுடன், 3 வான்கதவுகளில் மேலதிக நீர் வெளியேறுகின்றது. கித்துள்வெவக் குளத்தின் நீர்மட்டம் 8அடி ஒரு அங்குலமாகவும், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 15அடி 3அங்குலமாக உயர்ந்துள்ளதுடன், அக்குளத்தில் 4 வான்கதவுகள் 2அடி உயரத்தில் திறந்துவிடப்பட்டுள்ளன. வடமுனைக்குளம் 12அடி 7அங்குலம், இக்குளத்தில் ஒரு அடி நீர் வெளியேறிக் கொண்டிருக்கின்றது.

அதுபோல் நவகிரிக்குளத்தின் நீர்மட்டம் 30அடியாகவும் அக்குளத்தின் 2வான்கதவுகள் 1அடி 6அங்குலம் உயரத்தில் திறந்து விடப்பட்டுள்ளதாகவும், தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 16அடி ஒரு அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மண்டூர் - வெல்லாவெளி வீதியில் இரு இடங்களிலும், காக்காச்சுவட்டை – சின்னவத்தை வீதி, நாணமடு – மாலையர்கட்டு வீதி, கிரான் - புலிபாய்ந்தகல் வீதி, சித்தாண்டி - ஈரளக்குளம் பிரதான வீதி உள்ளிட்ட பல வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதனால் அவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

நேற்று (05) காலை 8.30 மணியுடன் கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நவகிரிப்பகுதியில் 72மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், தும்பங்கேணிப் பகுதியில் 47மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 44மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 17.1மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வாகனேரிப் பகுதியில் 7.8மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மட்டக்களப்பில் 26.6மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கிரான் பகுதியில் 37மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், மைலம்பெவெளி பகுதியில் 31.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், பாசிக்குடா பகுதியில் 42.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கல்முனைப் பகுதியில் 97.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு நிலையப் பொறுப்பதிகாரி சு.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் மாவட்டத்தின், தாழ்நிலப் பகுதியில் தேங்கியுள்ள வெள்ளநீர் வெளியேற முடியாமல் தேங்கியுள்ளதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

# மூதூரில் வீடு வீடாக டெங்கு பரிசோதனை

## நவம்பர், டிசம்பரில் 118 நோயாளர்கள் அடையாளம்




(மூதூர் நிருபர்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள ஆனைச்சேனை, ஜாயா நகர் பகுதிகளிலுள்ள வீடுகளில் நேற்று (05) வீட்டுக்கு வீடு டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் சுகாதார பணிமனையின் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், கடற்படையினர், மூதூர் சுகாதாரப் பணிமனையின் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்டோர் இணைந்து இப்பரிசோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தனர். இதன்போது டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு, ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன.



மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2021ஆம் ஆண்டு மாத்திரம் 133 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதோடு, இதில் நவம்பர், டிசம்பர் ஆகிய இறுதி மாதங்களில் மாத்திரம் 118 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலய பிரச்சினைக்கு சுமுக தீர்வுகாண நடவடிக்கை




(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு சுமுகத் தீர்வொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கட்டி முடிக்கப்பட்டுள்ள கணினி வள நிலையம் அங்கு பொருத்தமில்லை என்றும், அதேபோன்று அப் பாடசாலையின் அதிபரின் இடமாற்றத்தை இடைநிறுத்துமாறு கோரியும் பெற்றோர்கள் கடந்த திங்கட்கிழமை (03) பாடசாலை நுழைவாயிலை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலய மாணவிகளின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் (04) ஆம் திகதியும் பாடசாலை ஆசிரியர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபட்டதன் காரணமாக, பாடசாலைக்கு சென்ற மாணவிகள் ஏமாற்றத்துடன் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அதிகாரிகள் பாடசாலை சமூகத்துடன் கலந்துரையாடி வருவதுடன், குறித்த பிரச்சினைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொள்ள முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பட்டிருப்பு தேசிய பாடசாலை விஞ்ஞானப் போட்டியில் சாதனை!

(கல்லடி நிருபர்)

தேசிய விஞ்ஞான நிறுவனத்தால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிக்கான போட்டியில், தேசிய மட்டத்தில் மிகச் சிறந்த 10 ஆராய்ச்சிகளில் மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர் தேவகுமாரின் வழிகாட்டலின் கீழ், விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களான எம்.ரதுக்கேஷ், ரி.மனோஜ்கரன் மற்றும் பி.கோவர்த்தனன் ஆகிய மூன்று மாணவர்களுமே இப்போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

மிகச் சிறந்த ஆராய்ச்சிகளை வழங்கிய 10 பாடசாலைகளில் மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் மட்டுமே தமிழ்ப் பேசும் மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், தொடர்ச்சியாக 3ஆவது முறையாகவும் இச்சாதனையைப் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மூதூர் பிரதேச சபைக்கு தேசிய காங்கிரஸ் சார்பில் சுழற்சி முறையில் முஹம்மட் சிஹான் நியமனம்!

(நூருல் ஹுதா உமர்)

மூதூர் பிரதேச சபை உறுப்பினராக தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் முன்னிலையில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வை.எஸ்.முஹம்மட் சிஹான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் சிரேஷ்ட பிரதி தலைவர் வைத்தியர் ஏ.உதுமாலெப்பை, தேசிய அமைப்பாளர் டாக்டர் வை.எஸ்.முஹம்மட் ஸியா, மூதூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான ஜே.எம்.சுக்ரி, எஸ்.டீ.ஜஹ்பர், திருகோணமலை மாவட்ட தேசிய காங்கிரஸின் பொருளாளர் எஸ்.நபீர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மூதூர் பிரதேச சபைக்கு கிடைத்த ஆசனத்தை வருடம் ஒருவருக்கு என்ற ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் வாக்குறுதிக்கமைய, மூதூர் பிரதேச சபை உறுப்பினராக இருந்துவந்த தோப்பூர் பிரதேசத்தை சேர்ந்த எஸ்.டீ.ஜௌபர் அண்மையில் தனது பதவியை தாமாக முன்வந்து இராஜினாமா செய்திருந்தார். அந்த வெற்றிடத்தை நிரப்ப புதிய உறுப்பினராக வை.எஸ்.முஹம்மட் சிஹான் மூதூர் பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்டு நேற்று (05) கிழக்கு வாசலில் வைத்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



# சின்னமுகத்துவார ஆற்றுமுகம் தானாக உடைப்பெடுப்பு

## வெள்ள நீரால் போக்குவரத்து பாதிப்பு




(வி.சுகிர்தகுமார்)

அதிக மழை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிரதேசம் தானாக உடைப்பெடுத்துள்ளதுடன், சாகாமம் நீத்தையாறுக்கு அண்மித்த பிரதான வீதியின் மேலாக வெள்ளநீர் பாய்ந்து வருகின்றது.

இதனால் மக்களது போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் வயல்வெளிகள் யாவும் வெள்ளக்காடாக காட்சியளிப்பதை காணமுடிகின்றது.

விவசாய நிலங்கள் மற்றும் தாழ்நிலப்பிரதேங்களில் சூழ்ந்துள்ள வெள்ளநீரை வெளியேற்றும் பொருட்டும் வெள்ளநீரை வெளியேறும் சின்னமுகத்துவார ஆற்றுமுகப்பிரதேசத்தை அகழ்வது தொடர்பில் பிரதேச செயலக மட்டத்தில் ஆராய்ந்துவரும் நிலையிலேயே நேற்று (05) குறித்த பகுதி தானாக உடைப்பெடுத்து வெள்ளநீர் வெளியேறி வருகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வெள்ள அனர்த்த நிலை ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும் பிரதேச செயலாளர் வி.பபாகரன் களவிஜயத்தினை மேற்கொண்டு வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை அறிந்து கொண்ட நிலையிலேயே ஆற்றுமுகப்பிரதேசம் தானாக உடைப்பெடுத்துள்ளது.



இதேநேரம், அம்பாறை மாவட்டத்தில் நேற்று மழை சற்று தணிந்துள்ள நிலையில், வீதிகள், குடியிருப்புகள் என பல இடங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளமையும் இந்நிலை நீடித்தால் வெள்ள அனர்த்தம் ஏற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விசேட அதிரடிப்படையினரால் உலருணவுகள் கையளிப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ், எம்.என்.எம்.அப்றாஸ்)

பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் ஏற்பாடு செய்த கொரோனா தொற்று நோய் மற்றும் தற்போதைய வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (05) கல்முனை வொலிவோரியன் வீட்டுத்திட்ட ஹிஜ்ரா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

விசேட அதிரடிப் படையினரின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர, அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர். சேனாதீர, மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி. ஜெயவிடவிதான ஆகியோரது ஆலோசனை, வழிகாட்டலுக்கமைய பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கட்டமாக இந்த வேலைத்திட்டம் நேற்று சாய்ந்தமருது பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது.

# மருதமுனை ஹியுமன் லின்க் வளப்படுத்தல் மத்திய நிலையத்தில் தையல் நிலையம் ஸ்தாபிப்பு



(மருதமுனை நிருபர்)

மருதமுனை ஹியுமன் லின்க் விசேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் மத்திய நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "தையல் நிலையம்" நிலையத்தின் பணிப்பாளர் ஏ.கமறுத்தீன் தலைமையில் தொழிலதிபர் பரக்கத் டெக்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அல்-ஹாஜ்.எம்.ஐ.அப்துல் பரீட் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் மேர்ஸி லங்கா நிறுவன சட்ட ஆலோசகரும் செயற்திட்ட இணைப்பாளருமான அஷ்-ஷெய்க் முஜீப் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஹியுமன் லின்க் நிறுவன உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில், உளவளத்துணை ஆலோசகர் செல்வி.எம்.எம்.நூறா ஸஸ்னியா விசேட சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது.



இந்திய செய்திகள்

# இந்தியாவில் அடுத்த 2 வாரங்களில் கொரோனா 3ஆம் அலை உச்சத்தை எட்டும்

## ‘‘மருத்துவமனைகள் நிரம்பி வழியும்’’– விஞ்ஞானி எச்சரிக்கை

இந்தியாவில் அடுத்த 2 வாரங்களில் கொரோனா 3ஆம் அலை உச்சத்தை எட்டும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக இந்தியா முழுவதும் குறிப்பாக டில்லி, மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்களில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது. நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் அடுத்த 2 வாரங்களில் இந்தியாவிலுள்ள மருத்துவமனைகள் நிரம்பி வழியும் என்று உலக சுகாதார அமைப்பின் மூத்த விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

கொரோனா 2ஆம் அலையின் போது, இருந்த மருத்துவ சிகிச்சை பற்றாக்குறை இந்த முறை இருக்காது என தெரிவித்துள்ளதுடன் இந்திய மருத்துவமனைகள் தற்போது தயாராகவே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




டெல்ட்டாவை பின்னுக்கு தள்ளி ஓமிக்ரொன் தொற்று வேகமாக பரவி வருகிறது என்று நோய் எதிர்ப்புக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனை குழு தெரிவித்துள்ளது. ஜனவரி கடைசி வாரத்திலும் பெப்ரவரி முதல் வாரத்திலும் கொரோனா 3ஆவது அலை உச்சத்திலிருக்கும் என்றும் இந்த குழு கணித்துள்ளது.

### நாடுமுழுவதும் ஒரே நாளில் 58,097 பேருக்கு தொற்று

**ஒரே நாளில் 58,097 பேருக்கு தொற்று உறுதி**

இந்தியாவில் கடந்த சில நாட்களாக அதிகரித்து வரும் கொரோனா பாதிப்பு நேற்று ஓரேநாளில் 58 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

நேற்று 24 மணி நேரத்தில் புதிதாக 58,097 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் 534 பேர் உயிரிழந்துள்ளனர். மும்பையில் மட்டும் நேற்று 10,860பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஓமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையும் 2,135 ஆக அதிகரித்துள்ளது.

### 2000 பயணிகளுடன்....

## கோவாவிலிருந்து மும்பைக்கு சென்ற கப்பலில் 66 பேருக்கு கொரோனா

**சொகுசு கப்பல் சிறைப்பிடிப்பு**




கோவாவிலிருந்து மும்பையின் தெற்கு பல்லார்ட் துறைமுகத்துக்கு சென்ற கப்பலில் பயணித்த 66 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த சொகுசு கப்பலிலிருந்து பயணிகள் எவரும் வெளியேறாத வகையில் சிறைப்பிடித்துள்ளனர்.

இதனையடுத்து, மும்பை மாநகராட்சி சுகாதாரத்துறையினர் சொகுசு கப்பலில் பயணித்தோருக்கு கொரோனா பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

நெகட்டிவ் சான்று உள்ள பயணிகள் மட்டுமே வீட்டில் ஒரு வாரம் தனிமைப்படுத்திக் கொள்ள ஒப்புக் கொண்டால் கப்பலை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என்று மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயணிகள் தங்கள் சொந்த செலவில் ஹோட்டல்களில் தனிமைப்படுத்திக் கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 2 ஆயிரம் பேருடன் வந்துள்ள குறித்த சொகுசு கப்பலில் இதுவரை 66 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் இன்று முதல் இரவு ஊரடங்கு; ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு



தமிழகத்தில் இன்று முதல் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

உலகளவில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் கொரோனா நோய்த் தொற்று அதிகமாகப் பரவி வருகிறது.

தற்போது இந்தியாவில், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், புதுடில்லி, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் கொரோனா பரவல் வேகமெடுத்துள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழகத்தில் இன்று முதல் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியாகியுள்ள அறிவிப்பில்,

மாநிலம் முழுவதும் இன்று முதல் வார நாட்களில் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும்.

இரவுநேர ஊரடங்கு நேரத்தில் அனைத்து வணிக வளாகங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்கள் போன்றவை செயற்பட அனுமதி இல்லை.

அத்தியாவசிய தேவை மற்றும் மருத்துவத்துறை சார்ந்த பணிகள், ஏ.டி.எம். மையங்கள் போன்றவை இரவு நேரத்திலும் அனுமதிக்கப்படவுள்ளன.

**ஞாயிறு முழு ஊரடங்கு**

ஞாயிற்றுக்கிழமையன்று முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும். இருப்பினும், அத்தியாவசிய பணிகளுக்கு அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முழு ஊரடங்கின்போது பொது போக்குவரத்து மற்றும் மெட்ரோ ரயில் இயங்காது என்றும் முழு ஊரடங்கில் உணவகங்களில் பார்சல் சேவை மட்டும் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரவு ஊரடங்கின்போது மற்றும் முழு ஊரடங்கின்போது விமானம், ரயில் மற்றும் பஸ்களில் பயணிப்பதற்காக செல்லும் மக்கள் சொந்த மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வாறு பயணிக்கும்போது, பயணச்சீட்டு வைத்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் பொது மக்களுக்கு அனுமதி இல்லை. சமுதாய, கலாசார மற்றும் அரசியல் கூட்டங்கள் போன்ற பொது மக்கள் கூடும் நிகழ்ச்சிகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள தடை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



**ஆந்திராவிலிருந்து 750 கி.மீ. நடந்து சபரிமலை ஐயனை தரிசிக்க சென்ற மாற்றுத் திறனாளி பக்தர்...**



**சென்னை விமான நிலையத்தில் கடல் நண்டு என்று கூறி மலேஷியாவுக்கு கடத்த முயன்ற 1,364 நட்சத்திர ஆமைகள் சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டபோது...**

### ‘ஜெ.’ இல்ல விவகாரம்:

## அ.தி.மு.க. தொடர்ந்த மேன்முறையீடு மனு தள்ளுபடி



மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வசித்த போயஸ் தோட்டம் வேதா இல்லத்தை அரசுடைமையாக்கியதை இரத்து செய்த தனி நீதிபதியின் உத்தரவு செல்லும் எனக்கூறி அ.தி.மு.க. தொடர்ந்த மேன்முறையீட்டு வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வசித்த சென்னை போயஸ் தோட்டத்திலுள்ள வேதா இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றுவதற்கு அரசு கையகப்படுத்தியது. அரசின் கையகப்படுத்தும் நடவடிக்கையை எதிர்த்தும் நினைவு இல்லமாக மாற்றும் நடவடிக்கையை கைவிட்டு தங்களிடம் ஒப்படைக்க கோரியும், இழப்பீடு நிர்ணயித்ததை எதிர்த்தும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதாவின் சகோதரரின் மகள் தீபா மற்றும் தீபக் வழக்கு தொடர்ந்தனர்.

இம்மனுக்களை விசாரித்த நீதிபதி சேஷாயி, கையகப்படுத்தும் உத்தரவை இரத்து செய்து, இல்லத்தின் சாவிகளை வாரிசுதாரர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதனை எதிர்த்து அ.தி.மு.க. சார்பிலும், ஜெயலலிதா நினைவு இல்ல அறக்கட்டளை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.சண்முகம் சார்பிலும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இதனை விசாரித்த நீதிபதிகள் பரேஷ் உபாத்யாய், சத்திகுமார் சுகுமார குருப் ஆகியோர் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில்,

ஜெயலலிதா இல்லம் பொது நோக்கமின்றி அரசியல் காரணங்களுக்காகவே கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே நினைவிடம் இருக்கும் நிலையில், இரண்டாவது நினைவிடம் தேவையற்றது எனக்கூறி தனி நீதிபதியின் தீர்ப்பு செல்லும் எனக்கூறி மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தனர்.

### 4 ஆண்டுகள் உறவு

## உயிரிழந்த பெண்மயிலை பிரிய மறுத்த ஆண் மயில்



ராஜஸ்தான் மாநிலத்தில், இறந்து போன பெண் மயிலை பிரிய மறுத்து பின் தொடர்ந்து செல்லும் ஆண் மயிலின் காணொளி காண்போரின் இதயத்தை கனக்கச் செய்தது.

கச்சேரா நகரில் ஆண் மயிலும், பெண் மயிலும், 4 ஆண்டுகளாகச் சேர்ந்து வாழ்ந்த நிலையில், பெண் மயில் திடீரென உயிரிழந்தது.

அதன் உடலை வனத்துறையினர் எடுத்துச் சென்றபோது பின் தொடர்ந்து சென்ற ஆண் மயில், பெண் மயிலை அடக்கம் செய்யும்வரை அருகிலேயே இருந்துள்ளது. இணையத்தில் வைரலாகி வரும் இந்தக் காணொளி, காண்போரை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

# பஞ்சாப் பாலத்தில் பிரதமர் கார் மறிப்பு: பாதுகாப்பில் கோட்டைவிட்ட பொலிஸார்

## ‘‘‘உயிருடன் திரும்பியதற்காக உங்கள் முதலமைச்சருக்கு நன்றி’’ - மோடி வேதனை



பஞ்சாபில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்த பிரதமரின் வாகனத்தை மறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து விமான நிலையத்துக்கு திரும்பிய பிரதமர், மாநில அதிகாரிகளிடம், ‘‘உயிருடன் திரும்பியதற்காக உங்கள் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கிறேன்’’ என வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் விரைவில் சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. மத்திய அரசு கொண்டு வந்து தற்போது இரத்துச் செய்துவிட்ட புதிய வேளாண் சட்டங்களுக்கு கடும் எதிர்ப்பு எழுந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பிரதமர் மோடி நேற்று பெரோஸ்பூரில் பொதுக் கூட்டம் மற்றும் ஹுசைனிவாலாவில் தேசிய போர் நினைவிடத்துக்கு செல்லவிருந்தார். இதற்காக பதிந்தா விமான நிலையத்துக்கு வந்தவர், அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலமாக பயணிக்கவிருந்தார்.

மோசமான வானிலை காரணமாக 20 நிமிடங்கள் காத்திருந்தார். வானிலை சீரடையாததால் 100 கிலோ மீற்றரை தரை மார்க்கமாக கடப்பது என முடிவு செய்யப்பட்டது. மாநில டி.ஜி.பி.,க்கு தகவலளித்து பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்திய பின்னர் பிரதமரின் கார் புறப்பட்டது.

இந்நிலையில், ஹுசைனிவாலாவுக்கு 30 கிலோ மீற்றர் முன்பாக மேம்பாலத்தில் வந்துக்கொண்டிருந்த பிரதமரின் வாகனப் பேரணியை போராட்டக்காரர்கள் மறித்தனர்.

இது பிரதமரின் பாதுகாப்பில் மிகப்பெரிய குளறுபடியை ஏற்படுத்தியது. சுமார் 20 நிமிடங்கள் மேம்பாலத்திலேயே காத்திருந்த பிரதமர், நிலைமை சீரடையாததால் மீண்டும் விமான நிலையம் திரும்பினார். பெரோஸ்பூர் பொதுக் கூட்டமும் ரத்து செய்யப்பட்டது.

விமான நிலையத்திலிருந்த மாநில அரசு அதிகாரிகளிடம் பிரதமர், “இங்கு வரைக்குமாவது உயிருடன் திரும்பினேனே.






அதற்காக உங்கள் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்” என கோபமாக தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார்.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சு தெரிவிக்கையில்,

பிரதமரின் நிகழ்ச்சிகள் மற்றும் பயண திட்டங்கள் குறித்து முன்கூட்டியே பஞ்சாப் அரசிடம் தெரிவிக்கப்பட்டு விட்டது. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை, வழக்கம் போல் பஞ்சாப் அரசு செய்யவேண்டும். பிரதமர் செல்லும் வழியில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய பொலிஸாரை களமிறக்க வேண்டியது பஞ்சாப் அரசின் கடமை.

ஆனால், அதுபோல் எதுவும் செய்யவில்லை. இதனால், பிரதமரின் நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இது, பிரதமரின் பாதுகாப்பில் ஏற்பட்ட மிகப்பெரிய குளறுபடி. இது குறித்து பஞ்சாப் அரசு உரிய விளக்கம் அளிக்கவேண்டும் என தெரிவித்துள்ளது.

உலக செய்திகள்



# அமெரிக்காவில் கடும் பனிப்புயல்

## வாகனங்களை வீதியிலேயே நிறுத்தி விட்டு சாரதிகள் ஓட்டம்

அமெரிக்காவில் வீசிய கடும் பனிப்புயல் காரணமாக வாகனங்களை வீதியிலேயே நிறுத்திவிட்டு சாரதிகள் சென்றதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

வர்ஜீனியாவில் வீசிய பனிப்புயலைத் தொடர்ந்து ஐ 95 என்ற நெடுஞ்சாலை மூடப்பட்டது. இதனால் அந்த வீதியின் இருமருங்கிலும் ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

பெரும்பாலான வாகனசாரதிகள் தங்கள் வாகனங்களை அப்படியே நிறுத்தி விட்டுச் சென்றுவிட, எஞ்சியவர்களோ மணிக்கணக்கில் காத்திருக்கின்றனர். இதையடுத்து அவர்களுக்கு உணவும், குடிநீரும் வழங்க மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

# ஓமிக்ரோன் எண்ணிக்கை அதிகரித்தாலும் பேரிடர் காலம் விரைவில் முடிவுக்கு வரும்

## மருத்துவ நிபுணர்கள் கருத்து

உலகின் பலநாடுகளிலும் கொரோனாவின் உருமாறிய ஓமிக்ரோன் வேகமாகப் பரவிக் கொண்டு வந்தாலும் நோய்த் தொற்றின் பேரிடர் காலம் விரைவில் முடிவுக்கு வரும் என்று அறிவியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதத்தில் தென்னாபிரிக்காவில் ஓமிக்ரோன் கண்டுபிடிக்கப்பட்டது. எண்ணிக்கையளவில் அது அதிகரித்து பரவிவந்த போதும் அதன் தீவிரம் குறைவாக இருப்பதால் பெரும்பாலானோர் மருத்துவமனைக்கு செல்லாமலேயே குணமாகி விட்டனர். இது முற்றிலும் வேறான அனுபவம் என்று சான் பிரான்சிஸ்கோவிலுள்ள உயிரி அறிவியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வைரஸ் எப்போதும் நீங்காது. அது உருமாறியபடியே மீண்டும் மீண்டும் வரும். ஆனால், அதன் உருமாற்றம் அதிகரிக்க அதிகரிக்க நோய்த் தொற்றின் பேரிடர் காலம் முடிவுக்கு வரும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்தியவர்களை ஓமிக்ரோன் தாக்கினாலும் அவர்களின் உடல்களில் நோய் எதிர்ப்பு சக்தி வீரியத்துடன் இருப்பதால் ஓமிக்ரோன் பாதிப்பை முறியடித்து விடுவதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## "தடுப்பூசி செலுத்தாதவர்களை..."

# பிரான்ஸ் ஜனாதிபதியின் தரம் தாழ்ந்த பேச்சால் சர்ச்சை

தடுப்பூசி செலுத்தாதவர்கள் மீது ஆத்திரம் கொண்டு தரம்தாழ்ந்த வார்த்தைகளால் விமர்சித்து பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் கடும் கண்டனங்களை எதிர்கொண்டுள்ளார்.

ஓமிக்ரோன் தொற்று ஐரோப்பிய நாடுகளில் மிக வேகமாகப் பரவிவருகிறது. பிரான்ஸில் அன்றாடம் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதியாகி வருகிறது.

இந்நிலையில் ஊடகத்துக்குப் பேட்டியளித்த ஜனாதிபதி மெக்ரோன், "தடுப்பூசி செலுத்தாதவர்களை சிறையில் அடைக்கப்போவதில்லை. அவர்களைக் கட்டாயப்படுத்தி தடுப்பூசி செலுத்தப் போவதும் இல்லை. ஜனவரி 15ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தாதவர்கள் உணவகங்கள் செல்லமுடியாது, திரையரங்குக்குள் நுழைய முடியாது. தடுப்பூசி போடாதவர்களை சிறுநீர் கழிப்பதுபோல் உதாசீனப்படுத்தப் போகிறேன். அதுதான் இனி அரசின் கொள்கை" என்று தெரிவித்தார்.

அவரது தரக்குறைவான விமர்சனம் எதிர்க்கட்சிகளின் கண்டனத்தைப் பெற்றுள்ளது. வலதுசாரி தலைவரான மரைன் லே பென், ஒரு ஜனாதிபதியாக இருப்பவர் இவ்வாறாக தரம் தாழ்ந்து பேசக் கூடாது என ட்வீட் செய்துள்ளார்.

பிரான்ஸில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் மெக்ரான் போட்டியிடுவது சந்தேகமாக உள்ளது. இந்நிலையில் ஒருவேளை அவர் போட்டியிட்டால் இதுபோன்ற பேச்சுக்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் தெரிவிக்கப் படுகிறது.



# சீனாவில் கட்டுமானப் பணியின்போது திடீர் மண்சரிவு; 14 தொழிலாளர்கள் பலி



சீனாவின் குய்சோவ் மாகாணத்தின் பிஜி நகரில், கட்டுமானப் பணியின்போது ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர்.

பிஜி நகரில் மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு வந்த நிலையில், திடீரென மண்சரிவு ஏற்பட்டு கட்டுமான தொழிலாளர்கள் 17 பேர் இடிபாடுகளில் சிக்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக் குழுவினர், 14 பேரை சடலமாக மீட்டுள்ளனர்.

படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 3 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த மூவரின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும் பிஜி நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# பிரான்ஸில் கண்டறியப்பட்ட புதிய அதிவேக கொரோனாவின் இயல்பு

மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்ட ஓமிக்ரோன் வகை கொரோனாவால் உலக நாடுகள் தவித்து வரும் நிலையில், அதைவிட தீவிரமாகப் பரவும் புதிய கொரோனா வகை கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸின் ஐ.ஹெச்.யூ. மெடிட்டரேன் தொற்றுநோய் ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், 12 கொரோனா நோயாளிகளின் உடலில் முற்றிலும் புதிய வகை கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளனர். பிரான்ஸை தவிர வேறு எந்த நாட்டிலும் ஐ.ஹெச்.யூ. வகை கொரோனா இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும், ஆபிரிக்க நாடான கேமரூனுக்குச் சென்று பிரான்ஸ் திரும்பிய 12 பேரிடம்தான் அந்த வகை கொரோனா கண்டறியப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'பி.1.640.2' என வகைப்படுத்தப்பட்டுள்ள அந்த கொரோனா வகைக்கு, அதனைக் கண்டறிந்த ஆய்வகமான 'ஐ.ஹெச்.யூ.' என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அண்மையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையில், ஐ.ஹெச்.யூ. வகை கொரோனாவில் 46 குரோமோசோம் மாற்றங்கள் காணப்படுவதாகவும் 37 உட்கருத்துகள் (நியூக்ளியோடைட்) குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், இது ஓமிக்ரோன் வகை கொரோனாவைவிட மனிதர்களின் உடலில் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா போன்ற வைரஸ்களின் மேற்புறம் காணப்படும் 'கொக்கி' புரதங்கள்தான், மனித செல்களில் காணப்படும் புரதங்களோடு இணைந்து தொற்றுகின்றன. பல்வேறு வகை அமினோ அமிலங்கள் ஒன்றிணைந்து இந்தக் கொக்கிப் புரதங்களை உருவாக்குகின்றன.

தற்போது கொரோனாவுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் அனைத்தும், கொக்கிப் புரதங்களை இலக்காகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐ.ஹெச்.யூ. வகை கொரோனாக்களின் கொக்கிப் புரதங்களில் 14 வகை அமினோ அமிலங்கள் மாற்றியமைந்துள்ளன. அவற்றில் என்501வை என்றழைக்கப்படும் அமினோ அமிலமும் ஒன்று.

ஐ.ஹெச்.யூ வகை கொரோனாவின் கொக்கிப் புரதங்களில் அந்த வகை அமிலம் காணப்படுவதால் அது தீவிரமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே அந்த வகை அமினோ அமிலம் அல்ஃபா வகை கொரோனாவில் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து பீட்டா, காமா, டெல்ட்டா, ஓமிக்ரோன் உள்ளிட்ட வேகமாகப் பரவும் தன்மை கொண்ட கொரோனா வகைகளில் காணப்பட்டது.

இதுகுறித்து இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தன்னை எப்படி உருமாற்றம் செய்துகொள்ளும் என்பதை யாராலும் கணிக்க முடியாது என்பதை புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐ.ஹெச்.யூ. வகை கொரோனா உணர்த்துகிறது என்றனர்.

கடந்த ஆண்டின் முற்பகுதியில் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் டெல்ட்டா வகை கொரோனா மிக வேகமாகப் பரவி ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. அந்த வகை கொரோனாவைவிட பல மடங்கு வேகத்தில் பரவும் தன்மை கொண்ட ஓமிக்ரோன் வகை கொரோனா, தென்னாபிரிக்கா மற்றும் அதன் அண்டை நாடான போட்ஸ்வானாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கண்டறியப்பட்டது.

இதனால் அச்சமடைந்த உலக நாடுகள், ஓமிக்ரோன் வகை கொரோனாவைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதையும் மீறி, 118இற்கும் மேற்பட்ட நாடுகளில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு ஓமிக்ரோன் தொற்று பரவியுள்ளது.

அந்த வகை கொரோனா இதுவரை இல்லாத வேகத்தில் பரவும் தன்மை கொண்டதாக இருந்தாலும், அதனால் உயிரிழக்கும் அபாயம் மிகவும் குறைவாக உள்ளதாக பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழலில், ஓமிக்ரோனைவிட அதிக வேகத்தில் பரவும் புதிய வகை கொரோனா கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# மீண்டும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்தது வடகொரியா

## தென்கொரியா கடும் கண்டனம்; ஜப்பான் கவலை

கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய ஏவுகணையை கிழக்கு கடலோரப் பகுதியில், வட கொரியா மீண்டும் ஏவி சோதனை செய்துள்ளதாக, தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

வட கொரிய ஜனாதிபதியாகப் பதவியேற்று 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள கிம் ஜோங் உன், தமது கட்சி நிர்வாகக் கூட்டத்தில் அணுஆயுதங்களை விட மக்களுக்கு உணவே முக்கியம் என குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், 2022 புத்தாண்டில் முதல் ஏவுகணையை வடகொரியா ஏவியுள்ளது. இதற்கு தென்கொரியா கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், வட கொரியாவின் நடவடிக்கை தங்களுக்கு மிகவும் கவலை அளிப்பதாக, ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா (FUMIO KISHIDA) கருத்து தெரிவித்துள்ளார்.



## 11 கி.மீ. நீளம்; 18 மீற்றர் அகலத்தில் 6 பாதைகள்

# நீருக்குள் செல்லும் மிக நீண்ட பாலத்தை திறந்த சீனா

நீருக்குள் செல்லும் மிக நீண்ட பாலத்தை சீனா திறந்துள்ளது. ஜியாங்சு மாகாணத்திலுள்ள தைஹூ என்ற ஏரியில் இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது.

இந்த சுரங்கப் பாதை ஏறத்தாழ 1.56 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பில் கடந்த 2018ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் தொடங்கின. கிட்டத்தட்ட 11 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலத்தைக் கட்டமைக்க 2 மில்லியன் கனமீற்றருக்கும் அதிகமான கொன்கிரீட் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தினுள் 18 மீற்றர் அகலத்தில் 6 பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஓட்டுநர்களின் சோர்வைப் போக்கும் வகையில் வண்ணமயமான எல்.ஈ.டி. விளக்குகளும் பாலத்தினுள் பொருத்தப்பட்டுள்ளன.



## இலங்கை அணியின் இடைக்கால தலைமை பயிற்றுவிப்பாளராக ருமேஷ் ரத்நாயக்க

சுற்றுலா சிம்பாப்வே - இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமை பயிற்றுவிப்பாளராக, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ருமேஷ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த மிக்கி ஆர்த்தரின் பதவிக்காலம் நிறைவடைந்த பின் தலைமைப் பயிற்சியாளர் இன்றி காணப்படும் இலங்கை கிரிக்கெட் அணிக்கே இவ்வாறு தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், இலங்கை கிரிக்கெட் உயர் செயற்திறன் நிலையத்தின் பந்துவீச்சுப் பயிற்சியாளருமான ருமேஷ் ரத்நாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம் உயர் செயற்திறன் நிலையத்தின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக காணப்படும் ருவின் பீரிஸ், சிம்பாப்வே தொடரின்போது இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் செயற்படவுள்ளாரென இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை – சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

## மர்மங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் ஜோகோவிச்



டென்னிஸ் உலகின் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகளும், போட்டியை காண வரும் ரசிகர்களுக்கும் கொரோனா தடுப்பூசி போட்டிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து வீர, வீராங்கனைகளும் தடுப்பூசி செலுத்தப்பட்டதை உறுதி செய்துள்ளனர்.

ஆனால், முதல்நிலை வீரரும், 9 முறை அவுஸ் திரேலிய ஓபனை வென்றவருமான செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் தடுப்பூசி செலுத்தினாரா, இல்லையா? என்பதை வெளிப்படையாக தெரிவிக்காமல் இருந்தார். இதனால் அவர் தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில், கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் இருந்து ஜோகோவிச்சுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தடுப்பூசி செலுத் தாமல் அவுஸ்திரேலிய ஓபனில் விளையாட அனுமதி கிடைத்திருப்பதாக ஜோகோவிச் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கூறியுள்ளார்.

ஜோகோவிச் இதற்கு முன்பு சிட்னியில் நடந்த ஏ.டி.பி. கிண்ணத் தொடருக்கான செர்பிய அணியில் இடம்பிடித்திருந்தார். ஆனால், அவுஸ்திரேலிய ஓபனுக்கான பயிற்சிப் போட்டியில் இருந்து விலகினார். எனவே, அவர் போட் டியில் பங்கேற்பாரா? என்பது மர்மமாகவே இருந்தது. தற்போது அவர் தடுப்பூசியில் இருந்து விலக்கு பெற்ற தகவலை வெளியிட்டதன் மூலம் யுகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.



## மெக்ஸ்வெல்லுக்கு கொரோனா

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முக்கிய சகலதுறை வீரான க்ளேன் மெக்ஸ்வெல் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் பிக்பேஷ் இருபதுக்கு 20 லீக் போட்டியில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியின் தலைவராக உள்ள மெக்ஸ்வெல் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அந்த அணியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள 13ஆவது வீரர் மெக்ஸ்வெல் என்பதால் பி.பி.எல் தொடர் தொடர்ந்து நடைபெறுமா என்கிற கேள்வி எழுந்துள்ளது. ரெபிட் அண்டிஜன் பரிசோதனையில் மெக்ஸ்வெல்லுக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது. இதையடுத்து பி.சி.ஆர். பரிசோதனையை அவர் மேற்கொண்டுள்ளார். அதன் முடிவு வரும்வரை மெக்ஸ்வெல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



## டெஸ்ட் சம்பியனை வீழ்த்தி வரலாற்று வெற்றியை பதிவு செய்த பங்களாதேஷ்

பங்களாதேஷ் அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி வரலாற்று வெற்றியை ஒன்றை பதிவு செய்தது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக மொமினுல் ஹக் தலைமையிலான பங்களாதேஷ் அணி தற்போது



நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. கடந்த சனிக்கிழமை ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன் பிரகாரம், முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 328 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நியூசிலாந்து அணியை விடவும் 130 ஓட்டங்கள் அதிகமாக பெற்று 458 ஓட்டங்களை சேர்த்தது.




130 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணி 169 ஓட்டங்களுக்கு சுருண்டு போக பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக 40 ஓட்டங்கள் மாத்திரமே நிர்ணயிக்கப்பட்டது. வரலாற்று வெற்றியை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி இரண்டு விக்கெட்களை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி மூன்று சாதனைகளை படைத்துள்ளது. நியூசிலாந்து அணியை முதல் முறையாக நியூசிலாந்து மண்ணில் வைத்து வீழ்த்தி சாதனை படைத்திருக்கிறது. நியூசிலாந்து அணியுடன் பெற்ற முதல் டெஸ்ட் வெற்றியாகவும் இந்த வெற்றி பதிவானது. அது மாத்திரமல்லாமல், ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் முதல் 5 இடங்களுக்குள் இருக்கின்ற அணியை முதல் முறையாக பங்களாதேஷ் அணி வீழ்த்தியது.

இவற்றுக்கு அப்பால் கடந்த 2019-21 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டம் வென்ற நியூசிலாந்து அணியை பங்களாதேஷ் அணி வீழ்த்தியதும் ஒரு மிகப்பெரிய வரலாற்று சாதனையாகவே பேசப்படுகிறது.

## பீஜிங் ஒலிம்பிக்கில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்படுத்தப்படும் – சீனா அறிவிப்பு

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் முழுக்க முழுக்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்படுத்தப்படும் என்று சீனா அறிவித்துள்ளது.

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு 26 தளங்கள் உள்ளன. அவை, பீஜிங், ஹீபெய் பகுதிகளில் உள்ளன. அவற்றில் முற்றிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியே பயன்படுத்தப்படும் என்று சீனா உறுதி கூறியுள்ளது. அதேவேளையில், ஹைட்ரோஜன் எரிசக்தியில் இயங்கும் 700க்கும் மேற்பட்ட வாகனங்களும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான முன்னேற்பாடுகளில், மரம் நடும் திட்டம் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. அது சாங்சியாக்கோ பகுதியிலுள்ள காடுகளின் பரப்பளவை 80 வீதம்வரை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. குளிர்காலச் சூழலை உருவாக்க செயற்கைப் பனி தேவை என்றாலும், விளையாட்டுப் போட்டிகளின் ஏற்பாட்டாளர்கள் உள்ளூர் தண்ணீர் விநியோகத்தில் நெருக்கடியை உருவாக்க மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

மலைகளிலிருந்து வழிந்துவரும் தண்ணீரைச் சேகரித்தும் கோடைக்கால மழைப் பொழிவில் இருந்து கிடைக்கும் தண்ணீரில் இருந்தும் பனியும் பனிக்கட்டிகளும் உருவாக்கப்படும் என அதிகாரிகள் குறிப்பிட்டனர். இயற்கை வளங்கள், முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படும் வட்டப் பொருளியலுக்கு ஏற்ப, அந்த ஏற்பாடுகள் அமைந்திருக்கும்.

## பானுகவின் ஓய்வை உறுதிசெய்த இலங்கை கிரிக்கெட் சபை



இலங்கை கிரிக்கெட் அணியின் முக்கிய அதிரடி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான பானுக ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்து கடந்த திங்கட்கிழமையன்று இலங்கை கிரிக்கெட் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பிய நிலையில், நேற்று இலங்கை கிரிக்கெட் சபையானது அவரின் கடிதத்தை ஏற்று ஓய்வை உறுதி செய்தது.

முன்னதாக, இலங்கை கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்தியுள்ள புதிய உடற்தகுதி நியமங்களுடன் இனி விளையாட முடியாது என பானுக ராஜபக்ஷ அவரது கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், தனது குடும்ப விடயங்களினைக் கருத்திற்கொண்டு, தனது ஓய்வுக்கான கடிதத்தினை வழங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 2019ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டி மூலம் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமாகிய 30 வயதான பானுக்க ராஜபக்ஷ, 5 ஒருநாள் மற்றும் 18 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடியிருந்தார்.

## கங்குலியின் குடும்பத்துக்குள் புகுந்த கொரோனா



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் சௌரவ் கங்குலி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி அதிலிருந்து குணமடைந்த நிலையில் தற்பொழுது அவருடைய மகள் உட்பட குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. அனைவரும் தற்பொழுது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கங்குலி மகள் சனாவுக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. கங்குலியின் மகள் மட்டுமல்லாது, கங்குலியின் மாமா தெபாஷிஷ் கங்குலி, மைத்துனன் வ்ரோதீப் கங்குலி, மைத்துனி ஜாஸ்மின் கங்குலி ஆகியோருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

49 வயதான சௌரவ் கங்குலிக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு கடந்த வாரம் மருத்துவமனையில் வைத்தியர்களின் நெருக்கமான கண்காணிப்பில் இருந்தார். இவருக்கு மோனோ குளோனல் ஆண்டிபாடி சிகிச்சை அளிக்கப்பட்டு தேறினார். கங்குலி கடந்த ஆண்டில் இருமுறை மாரடைப்பினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு எஞ்சியோ சிகிச்சை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### வாசகர்களே!

உங்கள் பிரதேசங்களில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள், போட்டிகள் தொடர்பான செய்திகளை ‘தமிழன்’ பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், அது தொடர்பில் சுருக்கமாக எழுதி உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு *thamilansports@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7